ஈழமும் தமிழும் (3)

ஈழத்தின் முதலாவது வானசாஸ்திர நூல்

கிரகசார எண்ணல்

(கி.பி. 1506)


கி-பி. கரு0சூம்.வருஷமளவில்செ
கராசசேகரனென்னும் இராசனு
டைய அநுமதிப்படி வரருசீ என்
பவராற் செய்யப்பட்ட கிரகசார
எண்ணல் இதனுடன் சேர்க்கப்
பட்டிருக்கின்றது.

ஞானம் பாலச்சந்திரன்

ஞானம் பதிப்பகம்

ஈழமும் தமிழும் (3)

ஈழத்தின் முதலாவது வானசாஸ்திர நூல்

கிரகசார எண்ணல்

(கி.பி. 1506)

ஞானம் பாலச்சந்திரன்

ஞானம் பதிப்பகம்

ஞானம் வெளியீடு : 37

SL Rs. 200/-

US $ 2

ஈழமும் தமிழும் (3) – 'கிரகசார எண்ணல்'

ஞானம் பாலச்சந்திரன்

1ஆம் பதிப்பு, டிசம்பர். 2015

Eelamum Thamilum (3) - 'Kirakasara Ennal'

Gnanam Balachandran
(balag.lk@gmail.com)

First Edition, Dec. 2015

Designed & Published By: Gnanam Pathippakam, 3B, 46th Lane, Colombo 06, Sri Lanka.
Tel: 0094 11 2586013, Fax: 0094 11 2362862. Email: editor@gnanam.info
Printed by: Kumaran Press (Pvt) Ltd. 39, 36th Lane, Colombo 06, Sri Lanka.

ISBN 978-955-8354-60-5

PUBLIC DOMAIN You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

தமிழ்ப் பதிப்புத்துறையின்

பிதாமகரான

இராவ்பகதூர்

சி.வை.தாமோதரம்பிள்ளை

(1832–1901)

அவர்களுக்கு

இந்நூல் சமர்ப்பணம்

சீமான்களே! இவ்வாறு இறந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றாவது கிருபை பிறக்கவில்லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்!! அயலான் அழியக் காண்கினும் மனந் தளம்புகின்றதே! தமிழ் மாது நுந் தாயல்லவா! இவள் அழிய நமக்கென்னென்று வாளா இருக்கின்றீர்களா! தேசாபிமானம் மதாபிமானம் பாஷாபிமானமென்று இவையில்லாதார் பெருமையும் பெருமையா! இதனைத் தயைகூர்ந்து சிந்திப்பீர்களாக.

– சி.வை.தாமோதரம்பிள்ளை

பதிப்புரை

பல காரணிகளால் சங்க காலந்தொட்டு தமிழ் நூல்களை நாம் இழந்து வந்துள்ளோம் என்பதை வரலாற்றுப் பதிவுகளின்மூலம் அறியமுடிகிறது. கடல்கோள் என்னும் இயற்கை அனர்த்தம் தொடங்கி நூலக எரியூட்டல் என்னும் மனிதர்களின் திட்டமிடப்பட்ட செயல்கள்வரை தமிழ் நூல்கள் அழிவடைவதற்கு காரணமாகியுள்ளன. 'காலத்திற்கு பொருந்தாத நூல்களை காலம் அழித்துவிட்டது' என்னும் தேறுதல் வார்த்தைகளை நாம் முன்மொழிந்து வந்தாலும் இந்தநூல்கள் அழியாமல் கிடைத் திருப்பின் அவை சொல்லிநிற்கும் செய்திகள் பற்பலவாகும் என்பது நாம் அறிந்ததே.

ஈழத்திலே கி.பி. 1506 ஆம் ஆண்டளவில் மொழிபெயர்க்கப்பட்ட 'கிரகசார எண்ணல்' என்னும் நூலானது அழிந்துபோகாமல் மீட்டெடுக்கும் முயற்சியாக ஞானம் பாலச்சந்திரனின் இந்நூல் அமைகின்றது. ஈழத்து இலக்கிய வரலாற்றில் இதுவரை பதியப்படாத கிரகசார எண்ணல் நூலானது, ஈழத்து இலக்கிய வரலாற்றில் எழுந்த முதலாவது வானசாஸ்திர நூலென்பது அதன் முக்கியத்துவத்தை முன்நிறுத்துகிறது.

மேலும் ஈழத்து ஜோதிட புலமைத்துவ மரபை 500 ஆண்டுகள்வரை ஆதார பூர்வமாக விரிப்பதற்கு இம்முயற்சி வழிகோலுகின்றது. ஒரு ஜோதிடபுலமைத்துவ மரபி லிருந்து கிளைவிட்ட வாக்கிய பஞ்சாங்க மரபினரும், திருக்கணித பஞ்சாங்க மரபினரும் இன்றுவரை தமது சேவைகளை மக்களுக்கு வழங்கிவருகின்றனர். இக்கட்டுரையின் பிரதி யானது அச்சுக்குப் போகுமுன்னதாக கொக்குவில் வெ. இரகுநாத ஐயரிடமும் (வாக்கிய பஞ்சாங்கம்), மட்டுவில் சி.ஜெகதீஸ்வர சர்மாவிடமும் (திருக்கணித பஞ்சாங்கம்) அவர்களது மேலான கருத்துகளுக்காக பாலச்சந்திரனால் அனுப்பிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நூலுக்குப் பெருமைசேர்க்கும் வகையில் அணிந்துரை வழங்கிய பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா அவர்களுக்கு எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின் றோம்.

தமிழ்நூல்கள் அழிந்துபோகக்கூடாது என்று பிரக்ஞைபூர்வமாக நூல்களைப் பதிப்பித்தவர், தமிழ்ப் பதிப்புத்துறையின் பிதாமகரான சி.வை. தாமோதரம்பிள்ளை ஆவார். இவர் தமிழ்ப் பதிப்புத்துறைக்கு வரைவிலக்கணம் வகுத்தவர். சி.வை.தா.விற்கு முன்னதாக பதிப்புரை எழுதும் முறைமைகூட தமிழில் இருக்கவில்லை. 1901ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி அமரத்துவமடைந்த சி.வை. தாமோதரம்பிள்ளையவர்களை நினைவுகூரும்முகமாக, எமது பதிப்பகத்தால் இந்நூல் வெளிக்கொணரப்படுகிறது.

சஞ்சிகைப் பணிக்கும், நூல் பதிப்புப் பணிக்கும் ஆதரவு நல்கிவரும் வாசக அன்பர்களுக்கு எமது இதயங்கனிந்த நன்றி என்றும் உரியது.

தி. ஞானசேகரன்

15-12-2015

'ஞானம்' பதிப்பகம்,

3-B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06, இலங்கை.

editor@gnanam.info

அணிந்துரை

ஞானம் பாலச்சந்திரன் அவர்கள் ஈழத்துத் தமிழிலக்கிய உலகிற்கு தருகின்ற நூல்களைக் கண்டு பிரமித்து நிற்கின்றேன். தமிழ் ஆய்வு, தமிழியல் ஆய்வாக பரிணமித்துள்ள இக்காலகட்டத்திலே, ஞா. பாலச்சந்திரன் தருகின்ற நூல்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. **தமிழியல் ஆய்வாளன் ஒருவன் செய்யவேண்டிய வேலையை விஞ்ஞான தொழில்நுட்ப ஆய்வாளர் செய்வதென்பது ஒரு சாதனையே ஆகும்.** இந்தச் சாதனையை ஈழத்தமிழ் ஆய்வுலகம் நன்றியுடன் பாராட்டவேண்டும். தமிழ்–தமிழியல் ஆய்விலே ஞா.பா. ஆர்வம் காட்டுவது அவரது பிதிராஜிதக் கொடையாக இருக்கவேண்டும் என எண்ணுகின்றேன்.

வித்துவசிரோமணி கணேசையர், அவரது பெரிய தந்தையார் கதிர்காமையர், நல்லை குருமகாசந்நிதானமாக விளங்கிய ஶ்ரீலஶ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் (மணி ஐயர்) முதலான பெரும் புலமையாளர்கள் வழியிலே வந்தவர்தான் ஞா. பாலச்சந்திரன் அவர்கள். இவர் ஈழத்து இலக்கிய வரலாற்றுக்குப் **'புதிய ஒளி'** பாய்ச்சும் பணியில் ஈடுபட்டுள்ளமையைப் பாராட்டுகின்றோம்.

ஈழத்து இலக்கிய வரலாறே இன்னும் தெளிவாகக் கட்டமைக்கப்படவில்லை. கட்டமைக்கக்கூடிய சான்றுகள் போதியளவு கிடைக்கவில்லை. சான்றுகள் கிடைக்காமைக்கு பல காரணங்கள் உள்ளன. ஈழத்தமிழ் மக்களின் பேண்முறை இன்மை, அரச, மடாலய, ஆதீனங்களின் அனுசரணை இல்லாமை, காலத்திற்கு காலம் இலங்கைத் தமிழர் வாழும் பகுதிகள்மீது எழுந்த தென் இந்திய, தென் இலங்கை, ஐரோப்பியப் படையெடுப்புகள், மழை, வெள்ளம், புயல், அக்கினி முதலானவற்றால் ஏற்பட்ட அழிவுகள், 'இராமபாணம்' என்னும் ஒருவகைப் பூச்சி முதலானவை சான்றுகள் கிடைக்காமைக்குரிய சில காரணிகள் எனலாம். இவற்றில் இருந்து தப்பிப்பிழைத்தவற்றைக்கொண்டே நாம் இன்று இலக்கிய வரலாற்றைக் கட்டமைக்க முற்படுகின்றோம்.

ஈழத்துப் பூதந்தேவனார் என்ற சங்கப் புலவருடன் ஈழத்து இலக்கிய வரலாற்றைத் தொடங்கும் மரபொன்றுளது. பூதந்தேவன் என்ற பெயரின் முன்வரும் 'ஈழம்' என்ற அடையைவிட ஈழத்தைப் பிரதிபலிக்கும் எந்தச் சான்றும் அவரது பாடல்களில் இல்லை. எனினும் அவரை ஈழத்தவர் என்றே ஆய்வுலகம் அங்கீகரித்துள்ளது.

நமக்கு நீண்டதொரு இலக்கியவழி இருந்திருக்கவேண்டும். அந்தவழி புதர் மண்டி, காடெழும்பி, சிதைவடைந்து இன்று அடையாளம் காணமுடியாது மறைந்திருக்கவேண்டும் என்று பண்டிதமணி **சி.கணபதிப்பிள்ளை** குறிப்பிடுவதை இலகுவாக நிராகரித்து விடமுடியாது. நாமறிந்தவரையிலே நான்காம் பராக்கிரமபாகுவின் அரசவைப் புலவனாக **"விஞ்ஞைமறை வேதியனாம்" போசராசப் பண்டிதன்** (தேனுவரைப் பெருமாள்) செய்த **சரசோதிமாலை** என்னும் சோதிடநூலே இன்று நமக்குக் கிடைக்கும் காலத்தால் முந்திய தமிழ் நூலாகும்.

ஆரியச் சக்கரவர்த்திகள் எனும் யாழ்ப்பாண மன்னர்கள் காலம்தொடக்கம் ஐரோப்பியர் காலம்வரையான இலக்கிய வரலாற்றை ஓரளவுக்குத் தெரிந்துகொள்ள முடிகிறது. எனினும் இக்காலப்பகுதியில் தோன்றிய பல நூல்கள் மறைந்துவிட்டன. உதாரணமாக யாழ்ப்பாண மன்னர்கள் காலத்தெழுந்த **'இராசமுறை', 'பரராச சேகரன் உலா'** முதலியவை இன்று கிடைக்கவில்லை. 1918ஆம் ஆண்டு கல்லடி வேலுப்பிள்ளை எழுதிய ***யாழ்ப்பாண வைபவ கௌமுதி*** என்னும் நூலிலே இராசமுறை என்னும் நூல் உசாத்துணை நூலாகத் தரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஈழமும் தமிழும் எனத் தனது ஆய்வுப் பணியைத் தொடரும் ஞா. பாலச்சந்திரன் இத்தகைய நூல்களைத் தேடிக்கண்டுபிடித்துக் கொண்டுவரல்வேண்டும்.

'யாழ்ப்பாண மன்னர் நிறுவிய தமிழ்ச்சங்கம்', 'சைமன் காசிச்செட்டியின் அகராதி முயற்சிகள்' முதலான நூல்களைத் தந்த ஞா.பா. 'கிரகசார எண்ணல்' என்னும் நூலை இப்போ தருகின்றார். **கி.பி. 1506 ஆம் ஆண்டு வெளியாகிய வானசாஸ்திர நூல் இப்போதுதான் முதன்முறையாக எமது பார்வைக்குக் கிடைக்கின்றது.** போர்த்துக்கேய படையெடுப்பு நிகழ்ந்த காலத்திலே இந்நூல் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஈழத்து வைத்திய சோதிடநூல்களின் தோற்றத்திற்கு அரச அங்கீ காரமும் ஆதரவும் இருந்தமை யாவரும் அறிந்ததே.

ஈழத்தின் முதலாவது வானசாஸ்திர நூலான 'கிரகசார எண்ணலி'ன் தொடர்ச்சி இன்றுவரை தொடர்வதை நமது பஞ்சாங்கப் பாரம்பரியம் நிறுவும். ஈழத்துப் பஞ்சாங்க மரபு இராமலிங்க முனிவருடன் தொடங்குகின்றது. இவரின் வழிவந்தோரே இன்றும் பஞ்சாங்கம் கணிக்கின்றனர்.

19ஆம் நூற்றாண்டில் அமெரிக்க மிஷனைச் சேர்ந்த மேலைத்தேய வானியற் பண்டிதர்களும் இராமலிங்க முனிவரின் மரபில்வந்த விஸ்வநாத சாஸ்திரி அவர்களுக்கும் இடையே 'கிரகணம்' பற்றி எழுந்த சர்ச்சையை ஆய்வுலகம் அறியும். அதிலே விஸ்வநாத சாஸ்திரிகளின் கணிப்பே சரியானது என்று முடிவும் எடுக்கப்பட்ட தாக கூறப்படுகின்றது.

நீண்டதோர் இலக்கியப் பாரம்பரியத்தைக்கொண்ட நாம் எமது இருப்பை நிலைநிறுத்த இத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். இந்த வகையிலே எமது இலக்கிய ஆய்வுக்கு வலுச்சேர்க்கும் ஞா.பா. அவர்கள் நிச்சயம் பாராட்டப்பட வேண்டியவர். அவரின் பணிகள் தொடர வாழ்த்துவோமாக.

அன்புடன்,

பேராசிரியர் **எஸ். சிவலிங்கராஜா**

(முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

1

ஈழத்தில் ஜோதிடம்

பண்டையகாலம்தொட்டு தமிழர்கள் பேணிப்பாதுகாத்து வருகின்ற அறிவியல்துறைகளில் ஒன்றாக ஜோதிடம் இருந்து வருகின்றது. மற்றுமொருதுறை ஆயுள்வேதமாகும். இந்த இரண்டு துறைகளிலும் கடந்த சில நூற்றாண்டு காலமாக ஈழத்தறிஞர்கள் அதிக ஆர்வம் காட்டிவருகின்றனர் என்பது புலனாகிறது.

19ஆம் நூற்றாண்டில் ஈழத்திலே அறிவியல் துறையில் நடைபெற்ற முன்னோடி முயற்சிகள் திடீரெனத் தோன்றவில்லை எனவும், இதற்கு 700 ஆண்டுகாலப் பாரம்பரியம் உண்டு எனவும் பேராசிரியர் **ஆ. வேலுப்பிள்ளை** கூறியுள்ளார்.

> **"தமிழ்நாட்டு மன்னர்கள் எவரும் சோதிடம் வைத்தியம் என்னும் துறைகளிலே 19ஆம் நூற்றாண்டு வரையில் யாழ்ப்பாண மன்னர்கள் அளவு ஆர்வம் காட்டாமை கவனிக்கத்தக்கது. சோதிடத்தின் மூன்று கூறுகளில் கணிதம் ஒரு கூறு. கணி என்ற சொல் பண்டைக்காலத்திலிருந்து சோதிடரைக் குறிக்க வழங்கிவந்துள்ளது. வைத்தியம் உயிரியல் விஞ்ஞானத்தோடு நெருங்கிய தொடர்புடையது. யாழ்ப்பாணத் தமிழர் இன்றும் போற்றிவரும் துறைகள் இவை. 19ஆம் நூற்றாண்டில் மேனாட்டு முறையிலமைந்த மருத்துவ, கணித, விஞ்ஞான நூல்கள் தமிழில் முதன்முதல் யாழ்ப்பாணத்தில் எழுந்த பின்னணி இதுவே. அறிவு இலக்கியத்தைப் பேணுவதில், யாழ்ப்பாணத்துக்கு எழுநூற்றாண்டுப் பாரம்பரியம் உண்டு."**

– ஆ. வேலுப்பிள்ளை, தொடக்ககால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும்,
ஈழத்துப் பழைய இலக்கியங்கள், வரலாற்றுத் தேடல், 2009 (பக். 6)

ஆ. வேலுப்பிள்ளை
(1936-2015)

'ஜோதிடத்தை அறிவியல் துறையாகக் கணிப்பிட முடியுமா?' என்னும் வினாவை இன்றும் பலர் முன்வைப்பதைக் காணலாம். இந்தக்கேள்விக்கான விடையளிப்பதற்கு ஜோதிடத்தின் உபபிரிவுகளைத் தெரிந்துகொள்ளவேண்டும். ஜோதிடமானது மூன்று உபபிரிவுகளைக் கொண்டுள்ளது.

சித்தாந்தம் : கிரகங்களின், நட்சத்திரங்களின் கதிகளைக் கூறும் பகுதி.

ஹோரா : ஜனனகாலத்திலுள்ள கிரகங்களின் நிலைகொண்டு உரிய நபரின் சுப-அசுப பலன்களைக் கூறும்பகுதி.

ஸம்ஹிதா : மனைவிதி, சகுனம், நிமித்தம், ஆரூடம், பஞ்சபக்ஷி முதலியவற்றைக் கூறும்பகுதி.

இவை மூன்றும் ஒன்றுடனொன்று தொடர்புடையவை. கிரகங்களின் வேகங்களைக்கொண்டு பஞ்சாங்கம் கணிக்கும் படிமுறைகளையும் மற்றும், சூரிய சந்திர கிரகணங்கள் போன்றவற்றினைக் கணிக்கும் படிமுறைகளையும் ஜோதிடத்தின் **சித்தாந்தப் பகுதி** உள்ளடக்கியுள்ளது. உதாரணமாக, ஈழத்தில் வெளியிடப்பட்ட மன்மத வருடத்திற்கான வாக்கியவருட பஞ்சாங்கத்தில் (2015-2016) கிரகணங்கள் பற்றிய எதிர்வுகூறல்கள் காணப்படுவதைக் காணலாம்.

கிரகங்களின் துல்லியமான இயக்கங்களைக் கணிப்பதற்கு அதிநுட்பமான கணித அறிவு தேவைப்படுகிறது. ஜோதிடத்தின் இந்த உபபகுதியை **வானசாஸ்திரம்** என்று பண்டைய காலத்தில் பொதுவழக்கில் அழைத்தனர்.



– ஜோதிடத்தின் மூன்று உபபிரிவுகள்

மன்மத வருஷ கிரகணங்கள் **91**

1. மன்மத ஹூ ஆவணி மீ 27 உ (13-09-2015) ஞாயிற்றுக்கிழமை பார்சுவ சூரிய கிரகணம் இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், மொறீசியஸில் தோற்றாது. தென்னாபிரிக்காவில் காலையில் தோற்றும்.

2. மன்மத ஹூ புரட்டாதி மீ 11 உ (28-09-2015) திங்கட்கிழமை பூரண சந்திர கிரகணம் இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியாவில் தோற்றாது. தென்னாபிரிக்கா, மொறீசியஸில் அதிகாலையில் தோற்றும்.

3. மன்மத ஹூ மாசி மீ 26 உ (09-03-2016) புதன்கிழமை பூரண சூரிய கிரகணம் இலங்கை, இந்தியா, தென்னாபிரிக்கா, மொறீசியஸில் தோற்றாது. மலேசியா, சிங்கப்பூரில் காலையில் தோற்றும்.

– மன்மத வருட (2015–16) வாக்கிய பஞ்சாங்கம்,
இலங்கை (பக். 91)

	சனி	வி	
சந்	உதய லக்கினக் கிரகநிலை.		கே
ரா			ல
செ-சு ஆ-பு			

சித்திரபானுஹூ மார்கழிமீ ௫உ புதன்கிழமை இரவு அவிட்ட நக்ஷத்திரமும் பூர்வபக்க பஞ்சமி திதியும் வச்சிர யோகமும் பாலவ கரணமும் கூடிய நேரத்திலே சிங்க லக்கினத்திலே நல்லூரிலே தமது தந்தையார் வீட்டிற் பிறந்தனர்.

– ஆறுமுக நாவலர் ஜாதகம்
(18–12–1822)

ஜோதிடத்தின் சித்தாந்தப்பகுதியின் துணைகொண்டு ஒரு நபருடைய ஜாதகத்தைக் கணிக்கலாம். கணிக்கப்பட்ட ஜாதகத்தை வைத்துக்கொண்டு அந்நபருக்குரிய எதிர்காலப் பலன்களைக் கூறும்பகுதி **ஹோரா** எனப்படும்.

ஜாதகரின் பலனுக்கு எத்தகைய வீடு அமைந்தால் சிறப்பு, ஒரு காரியத்தைச் செய்யத்தொடங்குவதற்குரிய சுப-அசுப சகுனங்கள் யாவை, போன்றவற்றைக் கூறும்பகுதி **ஸம்ஹிதா** ஆகும்.

பொதுமக்கள் மத்தியில் ஜோதிடம் என்கின்றபோது **ஹோரா** மற்றும் **ஸம்கிதா** ஆகிய இரு பகுதிகள் மாத்திரமே கவனத்தில் கொள்ளப்படுகின்றன. இந்த இரண்டு பிரிவுகளையும் இணைத்து பொதுவழக்கில் **ஜோதிடசாத்திரம்** என்பர். இந்தப்பின்னணியில் பெரும்பாலானோர் ஜோதிடசாத்திரத்தை ஓர் அறிவியல் துறையாகக் கணிப்பது குறைவு. **சித்தாந்தப்** பகுதியாகிய **வானசாஸ்திரமும்** ஜோதிடத்தின் ஒருபகுதி என்பதை அறிந்தவர்களுக்கு ஜோதிடமானது தற்கால விஞ்ஞானத்தின் ஒருகூறு என்பது தெளிவாகும்.

ஈழத்தின் பண்டைய ஜோதிட நூல்கள் :

ஈழத்திலே நீண்டதொரு ஜோதிடப் பாரம்பரியம் இருந்து வந்துள்ளது. பல ஜோதிட நூல்களை எழுதுவதிலும், பஞ்சாங்கங்கள் கணிப்பதிலும், ஜோதிடத்தைக் கற்பிப்பதிலும் ஈழத்தவர்கள் அதிக அக்கறைகாட்டியுள்ளார்கள்.

14ஆம் நூற்றாண்டில் எழுந்த ***சரசோதிமாலை*** என்னும் நூலே தற்போது ஈழத்தில் கிடைக்கின்ற பழைய தமிழ் நூலாகும். இது கி.பி.1309 ஆண்டு, **போசராச பண்டிதர் (தேனுவரப்பெருமாள்)** என்பவரால் தம்பதெனியாவை அரசாண்ட சிங்கள மன்னன் **பண்டித பராக்கிரமபாகு**வின் அரசவையில் அரங்கேற்றப்பட்ட ஜோதிட நூலாகும். நூல் அரங்கேறிய விபரங்கள் வருமாறு.

வருடம் : சகவருடம் 1232. (கி.பி 1309-1310)
மாதம் : வைகாசி மாதம் (வசந்த காலம்)
நாள் : புதன்கிழமை பனை (அனுஷம்) நட்சத்திரம்

இக்காலப்பகுதியில் ஈழத்தின் வடபகுதியில் யாழ்ப்பாண அரசு (கி.பி. 1216 - கி.பி. 1620) செழிப்புற்று இருந்ததுடன் தமிழ்ப் பணியில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவந்துள்ளது. **4ஆவது தமிழ்ச் சங்கத்தை**



– சரசோதிமாலை

யாழ்ப்பாண மன்னர்கள் நிறுவி ஏறத்தாழ 300 ஆண்டுகாலமாகச் செயற்படுத்தி வந்துள்ளார்கள். புலவர்களைக்கொண்டு இச்சங்கத்தின் வாயிலாகப் பல நூல்களை எழுதுவித்து **சரஸ்வதி மஹாலயம்** என்னும் நூலகத்தில் ஆவணப்படுத்தி வந்துள்ளார்கள்.

4ஆவது தமிழ்ச் சங்க காலத்தில் **செகராசசேகர** மன்னனால் எழுதுவிக்கப்பட்ட **செகராசசேகரமாலை** என்னும் நூல் இன்று நமக்குக் கிடைக்கிறது. இது **சோம சன்மா** என்பவரால் பாடப்பெற்ற **ஜோதிட** நூலாகும். இதைச் செகராசசேகரன் இயற்றுவித்தான் என்று நூலின் பாயிரம் கூறுகின்றது. ஒன்பது படலங்களைக்கொண்டு 290 விருத்தப் பாடல்களால் இது பாடப்பெற்றுள்ளது.

ஜோதிட நூல்கள் என்கின்றபோது 14-16ஆம் நூற்றாண்டுகளில் எழுந்த நூல்களாக சரசோதிமாலை, செகராசசேகரமாலை ஆகிய இரண்டு நூல்களே எமக்குக் கிடைப்பதாக ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறுகள் பதிவுசெய்துள்ளன.

இந்தப்பின்னணியில் 'கி.பி. 1506ஆம் ஆண்டு செகராசசேகரனின் வேண்டுகோளின்படி **கிரகசார எண்ணல்** என்னும் நூல் எழுதப் பட்டுள்ளது' என்னும் செய்தி அதிர்ச்சியுடன்கூடிய மகிழ்ச்சியைத் தருகின்றது. இச்செய்தியை வட்டுக்கோட்டை செமினரியில் கற்பிப்ப தற்காக அமெரிக்க மிஷனால் 1848இல் அச்சிடப்பட்ட **சோதி சாத்திரம்** என்னும் நூலில் காணக்கூடியதாகவுள்ளது.


உ
கணபதி துணை
யாழ்ப்பாணத்து அரசரும்
தமிழை விருத்தி செய்தவரும்
மஹாவித்துவானுமாகிய
செகராசசேகரமஹாராஜாவினால்
இயற்றுவிக்கப்பட்ட
செகராசசேகரமாலை
மூலமும், உரையும்.
யாழ்ப்பாணம்
வண்ணார்பண்ணை
ஜோதிஷர்
வி. சபாபதிஐயரால்
பரிசோதித்து
தமது
ஸ்ரீ பாஸ்கர யந்திரசாலையில்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

1902இல் அச்சேறிய செகராசசேகரமாலை

செகராசசேகரன் **கி.பி.** 1506

கி-பி. ௧௫0௬ம்.வருஷமளவில்செகராசசேகரனென்னும் இராசனுடைய அநுமதிப்படி வரருசி என்பவராற் செய்யப்பட்ட கிரகசார எண்ணல் இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றது. இது வாக்கிய கரணமுறை. இத்தீவிலிருக்குஞ் சோதிடர்கள் இதின் வழியாய் அதிக நுட்பமான பலங்களைக் காணலாமென்று பெரும்பாலும் இதையே எடுத்துக்கொள்ளுகிறார்கள்.

கிரகசார எண்ணல்

ஈழம்

– சோதிசாத்திரம் (வட்டுக்கோட்டை செமினரி பாடநூல்), 1848
பதிகம், (பக். 17)



சோதிசாத்திரம்.

THE

ORIENTAL ASTRONOMER:

BEING A

COMPLETE SYSTEM

OF

HINDU ASTRONOMY,

ACCOMPANIED WITH A TRANSLATION AND NUMEROUS EXPLANATORY NOTES.

WITH AN APPENDIX.

JAFFNA:

AMERICAN MISSION PRESS:

1848.

1848இல் வெளியான சோதிசாத்திரம் –
யாழ்ப்பாணத்தில் அச்சேறியுள்ளது

கிரகசார எண்ணல் என்னும் நூல் எத்தன்மையது? அந் நூலை ஈழத்து ஜோதிடர்கள் எதற்காகப் பயன்படுத்தினர்? ஆகிய வினாக்களுக்கான விடையைக் காண்பதற்கு முன்பாக ஈழத்தில் காணப்பட்ட **ஜோதிட புலமைத்துவ மரபை** நாம் அறிதல்வேண்டும்.

பரம்பரை பரம்பரையாகக் கடத்தப்பட்டு 400-500 ஆண்டு காலமாக ஈழத்திலே ஜோதிடத் தலைமுறை ஒன்று காணப்படுகிறது என்பதும் இப்புலமைத்துவ மரபால் ஈழத்துத் தமிழ்ப் புலமும் அறிவியல் புலமும் செழுமைபெற்றதென்பதும் ஈழத்துத் தமிழ் வரலாற்றில் பதியப்படாமல் தவறவிடப்பட்டுள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

2

ஈழத்தின் ஜோதிட புலமைத்துவ மரபு

யாழ்ப்பாணத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பல புலமைத்துவப் போக்குகள் முக்கிய இடம்பெற்றுள்ளன என்பதைப் பேராசிரியர் **கா. சிவத்தம்பி** வலியுறுத்தியுள்ளார்.

> யாழ்ப்பாண இலக்கிய வரலாற்றை ஒரு குறிப்பிட்ட சிந்தனை மரபின் வெளிப்பாடாகக் கொள்ளும் ஒரு கருத்து நிலையும் உண்டு. குறிப்பாக 19ம் நூற்றாண்டு இலக்கியத்தை அவ்வாறு எடுத்துக் கூறுவதும், அந்தக் கருத்து நிலையின் பின்னணியிற் சென்ற கால இலக்கியத்தை நோக்குவதும் மரபாகிவந்துள்ளது.
>
> யாழ்ப்பாணத்து இலக்கிய வரலாற்றில் பல புலமைத்துவப் போக்குகள் (intellectual trents) முக்கிய இடம் பெற்றுள்ளன என்பதை வற்புறுத்துவதே இவ்வுரையின் நோக்கமாகும்.

– கா. சிவத்தம்பி, 1995
யாழ்ப்பாணத்தின் புலமைத்துவ மரபு,
சுதந்திர இலக்கிய விழா வெளியீடு – 1 (முன்னுரை)

ஈழத்துப் புலமைத்துவ மரபு என்னும்போது **ஆறுமுகநாவலரின் புலமைத்துவ மரபு** பற்றி விரிவாகவும் **உடுப்பிட்டி சிவசம்புப் புலவரின்** புலமைத்துவ மரபு பற்றி ஆங்காங்கும் பதியப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. இவற்றுடன் ஈழத்திலே செழிப்பானதொரு **ஜோதிட புலமைத்துவ மரபு** ஒன்று இருந்துவருகின்றது என்பதை தமிழ் வரலாற்று ஆசிரியர்கள் பதியத்தவறிவிட்டனர்.

இலங்கையில் பணிபுரிந்த *Sir James Emerson Tennent* என்பவரால் *1850*ஆம் ஆண்டு எழுதப்பெற்ற *Christianity in Ceylon* என்னும் நூலில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த **விஸ்வநாத சாஸ்திரியார்** பற்றிய கீழ்வரும் பதிவைத் தந்துள்ளார்.


Batticotta was till lately the residence of Vesuvenathen, the most celebrated of the astronomers of Ceylon, inasmuch as he concentrated in his own person the accumulated science of his ancestors, who for nine generations had been cultivators of the same study.

– Sir James Emerson Tennent, **1850**
Christianity in Ceylon, **(பக். 139)**

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஜோதிடரான விசுவநாதன் என்பவர் இலங்கையிலேயே பிரபல்யம்வாய்ந்த ஜோதிடர் எனவும் அவரின் முந்தையோர் **ஒன்பது தலைமுறைகளாக** ஜோதிட விஞ்ஞானத்தைப் பயின்று வந்துள்ளார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய வலிமைமிக்கதொரு புலமைத்துவ மரபு ஈழத்திலே இருந்ததுபற்றி ஒரு மேலைத்தேய அறிஞர் குறிப்பிடுவது கவனத்தில் கொள்ளத்தக்கது.

James Emerson Tennent
(1804 - 1869)

ஈழத்து ஜோதிட புலமைத்துவ மரபு



யாழ்ப்பாண இராச்சிய காலத்தில் யாழ்ப்பாண மன்னர்களால் சம்புகேச்சரத்திலிருந்து அழைத்துவரப்பட்ட ஜோதிட அந்தணர் ஒருவர் நல்லூரில் குடியேறி மன்னர்களின் ஜோதிடராய்ப் பணிபுரிந்தார் என்று அறியமுடிகின்றது. இவரின் வழித்தோன்றலில் சந்திரசேகர ஐயரின் புதல்வரான **இராமலிங்க ஐயர்** (இராமலிங்க முனிவர்) வந்துள்ளார் என்றும் இந்த இராமலிங்க ஐயர் என்பவரே ஈழத்தில் **முதன்முதலாக பஞ்சாங்கம்** கணித்த ஜோதிடர் என்பதையும் வரலாறுகள் பதிவுசெய்துள்ளன.

ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் வாழ்ந்த மேற்கூறிய இராம லிங்க ஐயரானவர் ஈழத்தின் முதலாவது பஞ்சாங்கத்தை (கிபி. 15-4-1667) கணித்ததுமட்டுமன்றி **பழமொழி பிரபந்தம்** (கி.பி. 1688), **சந்தான தீபிகை** (கி.பி.1-1-1713) ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார் என்று அறியமுடிகிறது. இராமலிங்க ஐயரின் வழித்தோன்றலில் வந்தவரே Sir James Emerson Tennent குறிப்பிட்ட வட்டுக்கோட்டையைச் சேர்ந்த விஸ்வநாத சாஸ்திரி ஆவார்.

இப்புலமைத்துவ மரபில் பல ஆளுமை முயற்சிகள் நடைபெற்றுள்ளதாகத் தெரிகின்றது. மேலும் தற்பொழுது ஈழத்திலே இருகிளைகளாக விளங்குகின்ற கொக்குவில் **வாக்கிய பஞ்சாங்க மரபும்** மட்டுவில் **திருக்கணித பஞ்சாங்க மரபும்** மேற்குறித்த ஒரு பரம்பரையிலிருந்து கிளைவிட்ட இரு புலமைத்துவ மரபுகளாகும்.

இராமலிங்க ஐயரின் வழித்தோன்றலில்வந்த இரகுநாத சாஸ்திரி யின் பேரனும் நடராஜ சாஸ்திரியின் புத்திரனுமான **நாராயண சாஸ்திரி** என்பவர் **கணித சிந்தாமணி** என்னும் ஜோதிட நூலை எழுதியுள்ளார். இவருக்கு விஸ்வநாத சாஸ்திரி இரண்டாவது மகனாகப் பிறந்து இலங்கையிலும் உலகளாவிய ரீதியிலும் புகழ்பெற்ற ஜோதிடரானார். நாராயண சாஸ்திரிக்கு **ஐந்து** பிள்ளைகள் இருந்தனர் என்றும் அதில் மூவர் சிறந்த ஆளுமைமிக்கோர் என்றும் தெரிகிறது.

1. சந்திரசேகர சாஸ்திரிகள் எழுதிய நூல்கள் :

திருநல்லைக் கிள்ளைவிடுதூது

மூவரம்மானை

சிவபூஜாவிதி

நித்தியகன்மவிதி

பஞ்சாங்கம் கணித்துள்ளார்

2. விசுவநாத சாஸ்திரி

(இராசாவின் கணிதர்)

எழுதிய நூல்கள் :

வாக்கிய கரண கிரகணம்
வண்ணைக்குறவஞ்சி
மாவைக் குறவஞ்சி
நகுலமலைக் குறவஞ்சி
மயூரகிரிப்புராணத்துக்குத்
  தெய்வநாயகி திருமணச் சருக்கம்
பஞ்சாங்கம் கணித்துள்ளார்

3. கங்காதர சாஸ்திரி

எழுதிய நூல்கள் :

திருவாரூர் வெண்பா
பஞ்சாங்கம் கணித்துள்ளார்

4. குமாரஸ்வாமி சாஸ்திரி

5. பெயர் தெரியவில்லை

1858 இல் வெளியான திரியாங்கம்
(நன்றி–கொக்குவில் வாக்கிய பஞ்சாங்கம்)

ஈழத்தில் காணப்படுகின்ற அனைத்துப் புலமைத்துவ மரபு களையும் ஒப்பிட்டு நோக்குகையில் நீண்டதொரு ஆவணப்படுத்தப்பட்ட புலமைத்துவ மரபை நாம் காணக்கூடியதாகவுள்ளது. ஜோதிட நூல்கள் மட்டுமன்றி தமிழ் நூல்களை ஆக்குவதிலும் இப்புலமைத்துவ மரபானது பங்கு வகித்துள்ளது.

ஒரு வேரிலிருந்து கிளைத்த வாக்கிய பஞ்சாங்க மரபினரும், திருக்கணித பஞ்சாங்க மரபினரும் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை இணைந்து அரிய தொண்டுகளை தமிழுக்கும் ஜோதிடத்துக்கும் ஆற்றியுள்ளனர் எனத் தெரிகிறது. வாக்கிய மரபைப் பின்பற்றிய இ.சி. இரகுநாத ஐயரின் தந்தையான ச.இ. இராமலிங்க ஐயரவர்கள், திருக்கணித மரபினரின் முந்தையரான சு. நடராஜ ஐயரின் வாயிலாக சந்தான தீபிகை நூலுக்கு உரையொன்று எழுதி அச்சிட்டுள்ளார் என்ற பதிவு காணப்படுகின்றது.

கிபி. 15-4-1667 அன்று ச. இராமலிங்க ஐயரால் கணிக்கப் பெற்ற ஈழத்தின் முதலாவது பஞ்சாங்கத்தைத் தொடர்ந்து அண்ணளவாக 350 ஆண்டுகளாக, இன்றுவரை (2015) பஞ்சாங்கம் கணிக்கப்பட்டு ஜோதிட புலமைத்துவ மரபானது ஈழத்தில் பேணிப் பாதுகாக்கப்பட்டுவருவது சிறப்பான விடயமாகும்.

கோணேச சாஸ்திரிகளின் மகனான இரகுநாத சாஸ்திரியின் பின்னர் வாக்கிய பஞ்சாங்க மற்றும் திருக்கணித பங்சாங்க மரபுகள் கிளைவிடுவதைக் காணலாம்.

இராமலிங்கமுனிவருக்குப் பின் அவர் தௌகித்திரர் வேங்கடேசசாஸ்திரிகளும் அவருக்குப் பின் அவர் புத்திரர் அகிலேசசாஸ்திரிகளும் அவருக்குப் பின் அவர் புத்திரர் கோணேசசாஸ்திரிகளும் அவருக்குப் பின் அவர் புத்திரர் இரகுநாதசாஸ்திரிகளும் பாரம்பரியமாய் உரிமைவழியே பஞ்சாங்கங் கணித்து வெளிப்படுத்திவந்தனர். மேற்குறித்த இரகுநாதசாஸ்திரிகளின் புத்திரருளொருவரான நடராஜசாஸ்திரிகளே இந்நூலாசிரியருடைய பிதாவாவர்.

குறித்த இரகுநாதசாஸ்திரிகளின் மற்றொரு புத்திரர் சுவாமிநாதசாஸ்திரிகள். அவர் புத்திரர் கைலாசநாதசாஸ்திரிகள். அவர் புத்திரர் சந்திரசேகரசாஸ்திரிகள். இச் சந்திரசேகரசாஸ்திரிகளின் புத்திரராகிய இரகுநாதசாஸ்திரிகள் அவர்களே நெடுங்காலமாகக் கிரமிகிதமாக வழங்கிவந்த பஞ்சாங்கத்தைச் சகாப்தம் கஅக-க்குச் சரியான காலயுத்திவருஷ முதலாக அச்சிற்பதிப்பித்து வெளியிட்டுவந்தனர்.

– இ.சி.இரகுநாத ஐயர் (வாக்கிய பஞ்சாங்கம்), 1939
பரகிதம் 3ஆம் பதிப்பு, முகவுரை (பக். 6)

இலங்கையில் 318 வருஷங்களுக்கு முன்னே சகாப்தம் 1589-ல் நிகழ்ந்த பிலவங்க ஹூ முதல் பிரம்மஸ்ரீ இராமலிங்க முனிவரால வாக்கிய முறைப்படி பஞ்சாங்கம் கணித்து வெளியிடப்பட்டு வந்தது. அவருக்குப்பின் அவர் தௌஹித்திரர் வெங்கடேச சாஸ்திரிகளாலும், பின சந்ததி சந்ததியாய் அகிலேச சாஸ்திரிகளாலும், திரிகோணேசசாஸ்திரிகளாலும் இரகுநாத சாஸ்திரிகளாலும், நடராச சாஸ்திரிகளாலும், நாராயண சாஸ்திரிகளாலும், சந்திரசேகர சாஸ்திரிகளாலும், கங்காதர சாஸ்திரிகளாலும் நாலாம் ஜார்ஜ் வேந்தரால் இராஜாங்க ஜோதிஷர் என்னும் பட்டம் பெற்ற விஸ்வநாத சாஸ்திரிகளாலும், நடராஜ சாஸ்திரிகளாலும் சிதம்பரநாத சாஸ்திரிகளாலும் கணித்து வெளியிடப்பட்டு வந்தது.

பழைய வாக்கியங்களைத் திருத்தங்களில்லாமல் உபயோகித்துக் கணிப்பதால் ஏற்படும் கிரகநிலைகள் பிரத்தியட்சத்திற்கு ஒத்துவராமை கண்டு முற்கூறிய சிதம்பரநாத சாஸ்திரிகளின் மருகர் ஹேற கார்த்திகேய ஐயர் அவர்கள் பத்தாண்டுகளாகத் திருக்கணிதாப்பியாசஞ்செய்து சகாப்தம் 1811-ல் நிகழ்ந்த சர்வதாரி ஹூ தொடக்கம் திருக்கணித முறைப்படி பஞ்சாங்கம் கணித்து வெளியிட்டார்.

– சி. சிதம்பரநாதக் குருக்கள் (திருக்கணித பஞ்சாங்கம்),
1985–86 குரோதன வருஷ திருக்கணித பஞ்சாங்கம், (பக். 1)

இவ்வச்சுப்பிரதியும் மற்றைய ஏட்டுப்பிரதிகளும் காலாந்தரத்தி லியல்பாகவேற்பட்ட வழுக்கணிறைந்து பயன்படாதிருத்தலைக் கண்ட யாழ்ப்பாணம் இரகுநாதையர் சோதிடபரிபாலனமட பரிபாலகரும் எமது தந்தையாருமாகிய ச. இ. சிவராமலிங்கையர் அவர்கள், இந்நூலாசிரியரின் சந்ததியினரும், வடமொழி தென்மொழி டச்மொழி என்னும் மூன்று மொழியினும் வல்லராய் மூவரம்மானை திருநல்லைக் கிள்ளைவிடுதூது வண்ணைக்குறவஞ்சி முதலிய சில பிரபந்தங்களும் நித்தியகன்மவிதி சிவபூசாவிதி முதலிய சமயாசார நூல்களும் உரைகளும் செய்து சிவபூசாதுரந்தரராய் மிகப் பிரசித்திபெற்று விளங்கிய நா. சந்திரசேகரசாஸ்திரிகளின் பிரபௌத்திரருமாகிய பிரமஸ்ரீ சு. நடராசையரவர்களைக் கொண்டு பரிசோதிக்கச்செய்து, அவரைக் கொண்டே ஓர் பொழிப்புரையுமெழுதுவித்து, சகாப்தம் கஅஉங-க்குச் சரியான சார்வரி௵ மாசி௴ இதன் முதற்பதிப்பை வெளியிட்டனர்.

– இ.சி.இரகுநாத ஐயர், 1940
சந்தான தீபிகை 2ஆம் பதிப்பு, (பதிப்புரை)

ஈழத்து ஜோதிட நூல்களைப் பாதுகாத்து அச்சிட்டதிலும் அவற்றுக்கு உரைகள் எழுதியதிலும் ஈழத்தின் ஜோதிட மரபை ஆவணப்படுத்தியதிலும் **இ.சி. இரகுநாத ஐயருக்கு** பெரியதொரு வகிபாகம் உண்டு. இவைபற்றி தனித்து ஆராய்ந்து ஆவணப்படுத்தவேண்டிய தேவையை ஈழத்து அறிஞர்கள் முன்னெடுக்கவேண்டும்.

இ.சி. இரகுநாதையர்
(1901 - 1969)

❍ ❍ ❍

3

வரருசி முனிவரின் ‘வாக்கிய கரணம்’

நாராயண சாஸ்திரியின் இரண்டாவது மகனான **விஸ்வநாத சாஸ்திரியாரின்** புகழ் உலகமட்டத்தில் பரவியிருந்தது என்று பதிவுகள் கூறுகின்றன. நான்காம் ஜோர்ஜ் மன்னருக்கு விஸ்வநாத சாஸ்திரியவர்கள் ஜோதிடம் கணித்ததால் **இராசாவின் கணிதர்** (Almanac Marker for his Majesty) என்ற சிறப்புப் பட்டம் அவருக்கு வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் **கணித சிங்கம்** என்றும் அவர் பொதுவழக்கில் அழைக்கப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை மிசனெரியிலிருந்து இரண்டு மைல் தொலைவில் வசித்த விஸ்வநாத சாஸ்திரியவர்கள் *1756*ஆம் ஆண்டு பிறந்துள்ளார் என்றும் *1845*ஆம் ஆண்டு அவர் இறக்கும்வரை பஞ்சாங்கம் கணித்துள்ளார் என்றும் தெரிகின்றது. பஞ்சாங்கம் கணித்தது மட்டுமன்றி **வாக்கிய கரண கிரகணம், வண்ணைக் குறவஞ்சி, மாவைக் குறவஞ்சி, நகுலமலைக் குறவஞ்சி, மயூரகிரிப்புராணத்துக்குத் தெய்வ நாயகி திருமணச் சருக்கம்** ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார் என்பதை அறியமுடிகிறது. விஸ்வநாத சாஸ்திரி பற்றி **சைமன் காசிச் செட்டி**யவர்கள் கீழ்வருமாறு பதிவுசெய்துள்ளார்.

> His Almanac, which he published every year until his death, was preferred to all others as being more accurate; and Sir ALEXANDER JOHNSTON while Chief Justice of Ceylon, procured for him from GEORGE the IVth, the honorary distinction of Almanac Maker to his Majesty"

– சைமன் காசிச்செட்டி, 1859
தமிழ் புளூராக், The Tamil Plutarch, **(பக். 117)**

சைமன் காசிச்செட்டி
(1807-1860)

வட்டுக்கோட்டை செமினரியின் அதிபராக *1836-1841* மற்றும் *1845-1849* காலப்பகுதியில் பணிபுரிந்த **ஹொய்சிங்டன்** *(H. R. Hoisington)* அவர்கள், பேராசிரியராகவும் சேவை புரிந்துள்ளார். இவர் *1848*ஆம் ஆண்டு பதிப்பித்த சோதி சாத்திரம் என்னும் நூலின் முகவுரையில் (பதிகம்) விஸ்வநாத சாஸ்திரி பற்றியும் அவரின் **வாக்கிய கரண கிரகணம்** என்னும் நூல் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் தம்முடைய சோதிசாஸ்திர நூலின் ஒரு பகுதியாக வாக்கிய கரண கிரகணம் நூலையும் இணைத்துள்ளார்.



H. R. Hoisington
(1801-1858)

On the subject of *Eclipses*, a modern compilation has been subjoined made by a native Astronomer of this Province. The epoch of this work is A. D. 1788; though doubtless since modified andcorrected, in many particulars, as, from time to time, facts required. It is written in plain prose style. It bears the title *Vakya Karanam*, being constructed on the principles of the *Vakya* process. It seems to have been taken chiefly from a more ancient work of the same name; but is rendered more correct by means of the light which European science has shed in the land.

கிரகணமுறைகளுள், சிறிதுநாட்களுக்கு முன் இந்நாட்டிற் பிறந்த சோதிசாஸதிரியினுற் செய்யப்பட்ட ஒரு முறை சேர்க்கப்பட்டிருக்கின்றது. இதன் துருவ ஆண்டு, கி-பி. கஎஅஅ. அது உரைத்தமிழால் எழுதப்பட்டிருக்கின்றது. வாக்கிய விதியைக்கொண்டு செய்யப்பட்டிருக்கிறபடியால் அதற்கு வாக்கிய கரண கிரகணம் என்றுபெயர். அப்பெயர்கொண்ட ஒரு பழைய நூலிலிருந்தெடுக்கப்பட்டு இத்தேசத்தில் வழங்கி வருகிற ஏரோப்பைய சாஸ்திர அறிவைக்கொண்டு அதிகந் திருத்தப்பட்டிருக்கின்றதுபோலும்.

– சோதிசாத்திரம் (வட்டுக்கோட்டை செமினரி பாடநூல்), 1848
முன்னுரை, (பக். 18)

மேற்காட்டிய குறிப்பிலிருந்து நாம் கீழ்க்கண்ட விடயங்களை அறியமுடிகிறது.

- **கிரகண முறைகளை கணிப்பதுபற்றி விஸ்வநாத சாஸ்திரியாரின் "வாக்கிய கரண கிரகணம்" நூல் கூறுகின்றது.**
- **இந்நூலானது கி.பி.1788ஆம் ஆண்டு எழுதப்பட்டுள்ளது.**
- **விஸ்வநாத சாஸ்திரியவர்கள் "உரைத்தமிழால்" இந்நூலினைச் செய்துள்ளார்கள்.**
- **வாக்கிய அறிவைக்கொண்டு இந்நூல் செய்யப்பட்டிருப்பினும் ஐரோப்பிய முறைகளுக்கு ஏற்ப ஆங்காங்கு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. ஈழத்துத் திருக்கணித பஞ்சாங்கத்துக்கான அடித்தளம் இங்கு தொடங்குவதைக் காணலாம்.**
- **"வாக்கிய கரண கிரகணம்" என்னும் அதேபெயர்கொண்ட பழைய நூல் ஒன்றினைப் பின்பற்றியே இந்நூல் செய்யப்பட்டுள்ளது.**



சகாப்தம் ௲௭௱௭௰. சென்று செல்லாநின்ற கீலகவருஷம்
நாராயண சாஸ்திரியார் குமாரன் விசுவநாத சாஸ்தி
ரியார் செய்த,

வாக்கிய கரண கிரகணம்.

௧. இராகுகேது நிற்கிற இராசி அறிந்து அந்த இராசிமா
தங்களிலும் அதற்கு முன்பின் இராசிமாதங்களிலும் ப
கலிலே அமாவாசை அற்றுற் சூரியகிரகணம் வருமென்று
ம் இரவிலே பூரணை அற்றுற் சந்திரகிரகணம் வருமென்
றுங்கண்டு,

௨. அன்று சூரியோதய வரைக்குக் கலியுகத்திற் சென்
ற தினுதி சுத்ததினத்தைவைத்து இதிலே "மாலைதந்தீர்
பெண்பேற" என்று களைந்து நின்றசேடத்திற்குச் சோம
வாராதி கண்டம் என்று பெயராம்.

விசேட வுரை:

"மாலதந்தீர் பெண்பேற" என்று களைந்தது சுத்ததினத்தைச் சு
ருக்கும்படி. இதினுல் துருவங்கட்டியது கிறிஸ்தவருஷம் ௧௭௫௬க்கெ
ன்றறியலாம். இது இந்நூல் ஆசிரியருக்குச் சனனவருஷமுமாம்.

[விஸ்வநாத சாஸ்திரி 1756இல் பிறந்துள்ளார்]

– சோதிசாத்திரம் (வட்டுக்கோட்டை செமினரி பாடநூல்), 1848
வாக்கிய கரண கிரகணம், (பக். 77)

நாராயண சாஸ்திரிகள் :

"விஸ்வநாத சாஸ்திரியார் அவர்கள் 'வாக்கிய கரண கிரகணம்' என்னும் அதே பெயர்கொண்ட நூலைப் பின்பற்றியே தன்னுடைய 22 ஆவது வயதில், 1788ஆம் ஆண்டு மேலே குறிப்பிடப்பட்ட கிரகணம் கணிக்கும் தமது நூலினைச் செய்துள்ளார்" என்னும் தகவலானது மேலதிக தேடல்களுக்கு எம்மை வழிநடத்துகிறது. இதற்கான விடையை அவரின் தந்தையாரின் வாழ்க்கை வரலாற்றில் தேடுவது பொருத்தமாகும்.

விஸ்வநாத சாஸ்திரிகளின் தந்தையான நாராயண சாஸ்திரி களும் சிறந்த ஜோதிடராகவும் கணிதராகவும் விளங்கியுள்ளார். அவர் செய்த **கணித சிந்தாமணி** என்னும் நூலானது இதற்குச் சான்று பகர்கின்றது.

இருப்பினும் ***கணித சிந்தாமணி*** என்னும் நூலை நாராயண சாஸ்திரியின் மகனான விஸ்வநாத சாஸ்திரியே இயற்றினார் என்னும் தவறான கருத்து நிலவுவதையும் ***இ.சி. இரகுநாத ஐயர்*** தெளிவுபடுத்தியுள்ளார்.

முன் வெளியான முதலாம் இரண்டாம் பதிப்புக்களில் இந்நூலாசிரியர் விசுவநாதசாஸ்திரிகள் என்று மாறுபாடாக வெளியிடப்பட்டதற்குக் காரணம் முன் இந்நூலின் சிறப்புப்பாயிரம் முதலியவை கிடைக்கப்பெறாமையேயாம். இப்போது இந்நூலின் சிறப்புப்பாயிரம் முதலிய செய்யுட்களடங்கிய ஏட்டுப்பிரதியொன்று கிடைக்கப்பெற்றமையால், ஆக்கியோன் பெயர் தெளிவாக விளங்கிற்று. ஆகவே, இந்நூலாசிரியர் விசுவநாதசாஸ்திரிகளின் பிதாவான ந. நாராயணசாஸ்திரிகளேயாவர்.

– இ.சி.இரகுநாத ஐயர், 1939
பரகிதம் 3ஆம் பதிப்பு, முகவுரை (பக். 4)

மேலும், *1830-1840*களில் விஸ்வநாத சாஸ்திரியைச் செமினரியில் கண்டிருந்த ***ஆனல்ட் சதாசிவம்பிள்ளையும்***, தமது நூலில் *(1886)* கணித சிந்தாமணிபற்றிக் குறிப்பிட்டுள்ளார். விஸ்வநாதரின் தந்தையான நாராயண சாஸ்திரியே கணித சிந்தாமணியின் ஆசிரியர் என்பது இதனால் ஐயமறத் தெளிவாகின்றது.

சாஸ்திரசாலைக்கு நாம் சென்ற ௧௮௩௨-ம் ௵ விசுவநாத சாஸ்திரியார் உயிருடன் இருந்தார். இவரது பந்துக்கள் அநேகர் இந்த நிமிஷத்திலும் சீவிக்கின்றார்கள். சிலர் வாழையடி வாழைகளாய்க் கணித சாஸ்திரிகளாகவே இருக்கின்றார்கள்.

நாராயண ஐயர்—**Narayana Ayar**.

வடராசையர் புத்திரராகும் இவர் கணித சிங்கம் எனப் பேர்பெற்ற விசுவநாத சாத்திரியார்க்குத் தந்தையார். இவர் வட்டுக்கோட்டைத் தெற்கு அராலியில் வசித்தவர். கணித சிந்தாமணி எனும் நூலை இவர் இயற்றினர்.

– ஆ.சதாசிவம்பிள்ளை, 1886, பாவலர் சரித்திர தீபகம்,
விஸ்வநாத சாஸ்திரி வரலாறு – மேலது (பக். 254)
நாராயண ஐயர் வரலாறு – கீழது (பக். 198)

ஆ.சதாசிவம்பிள்ளை
(1820-1895)

நாராயண சாஸ்திரிகளின் கணித சிந்தாமணி நூலை அவரின் மகன் விஸ்வநாத சாஸ்திரிகள் எழுதியதாகக் கருத்து நிலவுவதற்கு விஸ்வநாத சாஸ்திரியின் புகழ்மட்டும் காரணமல்ல என்பதை கணித சிந்தாமணி நூலினை ஆராய்பவர்கள் புரிந்துகொள்வர்.

நாராயண சாஸ்திரிகளின் கணித சிந்தாமணி நூல் :

ஜோதிடத்தில் சித்தாந்தம், ஹோரா, சம்ஹிதா என்னும் மூன்று பிரிவுகள் (இந்நூல் பக்கம் 4) உள்ளன. இவற்றுள் கிரகங்களின் வேகங்கள், சூரிய சந்திர கிரகணங்களின் கணிப்பிற்கான விபரங்களைக்கூறும் பகுதியான சித்தாந்தப்பகுதியை விளக்கும் முகமாக கீழ்க்கண்ட மூன்று நூல்கள் ஜோதிட உலகில் எழுந்துள்ளதாகத் தெரிகிறது.

1. **வாக்கியகரணம்**
2. **கரணப் பிரகாசம்**
3. **பரகிதம்**

இவற்றுள் **வாக்கியகரணம்** என்னும் கணித நூலானது சமஸ்கிருத மொழியில் **வரருசி** முனிவரால் எழுதப்பட்டது. இது வாக்கிய கணித முறைப்படி அமைந்தது. வடமொழியில் அமைந்த இந்த வாக்கிய கரணத்தைத் தமிழில் ந. நாராயண சாஸ்திரிகள் மொழிபெயர்த்து **கணித சிந்தாமணி** என்னும் பெயரில் நூலாக்கியுள்ளார்.

சித்தாந்தஸ்கந்தத்தை விரித்துவிளக்கிச் செய்யப்பட்டுள்ள நூல்கள் சித்தாந்தங்கள் எனப்படும். இவை பதினெட்டுள. இவற்றுள், வடஇந்தியாவில் சூரியசித்தாந்தமும், தென்னிந்தியாவில் (தமிழ்நாட்டிலும், மலையாளத்திலும்) ஆரியபடசித்தாந்தமுமே இற்றைவரை ஆன்றோர்களால் அனுபவத்தில் ஆளப்படுகின்றன. ஆரியபடசித்தாந்தத்தை ஆதாரமாகக்கொண்டு நுட்பமாகச் செய்யப்பட்ட கணிதநூல்கள் வாக்கியகரணம், கரணப்பிரகாசம், பரகிதம் என்பனவாம்.

இவற்றுள், வாக்கியகரணம் என்னும் கணிதநூல் வரருசிமுனிவரால் வடமொழியில் செய்யப்பட்டுள்ளது. இது பஞ்சாங்ககணனம், ஸ்புடகணனம், சாரகணனம், கிரகணகணனம் என நான்கு பிரிவுகளையுடையதாகும். இவ் வடமொழி வாக்கியகணிதத்தை, தமிழ்மக்கள் யாவரும் எளிதி லுணர்ந்துகொள்ளும் பொருட்டு, இற்றைக்கு ஏறக்குறைய 180 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அராலியில் வசித்த கோ. இரகுநாதசாஸ்திரிகளின் புத்திரரும் சுவாமிநாதசாஸ்திரிகளின் சகோதரருமாகிய நடராஜசாஸ்திரிகள்அவர்கள் புத்திரர் நாராயணசாஸ்திரிகள்அவர்கள் தமிழில் மொழிபெயர்த்துக் கணித சிந்தாமணி என்னும் பெயருடன் பாடியுள்ளார்.

– இ.சி.இரகுநாத ஐயர், 1939
பரகிதம் 3ஆம் பதிப்பு, முகவுரை (பக். 3–4)

மேற்காட்டிய குறிப்பிலிருந்து நாம் கீழ்க்கண்ட முடிவுகளுக்கு வரலாம்.

- **ந. நாராயண சாஸ்திரியவர்கள் வரருசி முனிவரால் வடமொழியில் செய்யப்பட்ட “வாக்கிய கரணம்” என்னும் நூலினைத் தமிழில் “கணித சிந்தாமணி” என்று மொழிபெயர்த்துள்ளார்.**
- **வரருசி முனிவரின் வாக்கிய கரணம் நூலில் பஞ்சாங்க கணனம், ஸ்புடக கணனம், சார கணனம், கிரகண கணனம் என்னும் நான்கு பகுதிகள்**

உள்ளன. இந்நான்கு பகுதிகளையும் உள்ளடக்கிய மொழிபெயர்ப்பாக கணித சிந்தாமணி நூல் அமைந்துள்ளது. இதன்படி கணித சிந்தாமணி நூலில் "வாக்கிய கரண கிரகண கணனம்" என்பது ஒரு பகுதியாகும்.

நான்கு பகுதிகளையும் ந. நாராயண சாஸ்திரிகள் கணித சிந்தாமணி என்று மொழிபெயர்த்திருந்த போதிலும் 1939ஆம் ஆண்டுவரை அவற்றுள் ஸ்புடக கணனம் பகுதி மாத்திரமே **பரகிதம்** என்னும் பெயருடன் அச்சாகியுள்ளது. மிகுதி மூன்று பகுதிகளும் ஓலைச் சுவடிகள் வடிவிலேயே உள்ளன என்பது கவலைதரும் செய்தியாகும்.

> இக் கணிதசிந்தாமணியிலுள்ள ஸ்புடகணனமாகிய பகுதியே **பரகிதம்** என்னும் பெயருடன் இந்நூலாக வெளியிடப்பட்டிருக்கின்றது. எஞ்சிய பஞ்சாங்க கணனம், சாரகணனம், கிரகணகணனம் என்பவை இதுகாறும் அச்சிடப்படாது ஏட்டுப்பிரதியாகவே இருக்கின்றன.

– இ.சி.இரகுநாத ஐயர், 1939
பரகிதம் 3ஆம் பதிப்பு, முகவுரை (பக். 4)

> **தேசாந்தர நியதிகளின் விளக்கம்**
>
> **கணித மத்தியஸ்தானம்**
>
> உஜ்ஜயினி நகரத்திற்கு நேர் தெற்காகப் பூமத்திய ரேகை (equator) எனப்படும் நிரக்ஷரேகையில் அமைந்திருக்கும் இடத்தையே கணிதமத்தியஸ்தானமாகக்கொண்டு இந்தியசோதிட வானசாஸ்திரம் வரையறுக்கப்பட்டிருக்கிறது. இக் கணிதமத்தியஸ்தானம் இந்துசமுத்திரத்திலுள்ளது; நிலப்பரப்பில் உள்ளதன்று. இவ்விடத்தை இந்தியசோதிட கணித சித்தாந்திகள் இலங்கா என வழங்கினர். இவ்விலங்காவும், தற்காலம் இலங்கை (Ceylon) என வழங்கப்படும் நமது ஈழநாடும் வெவ்வேறானவை.

– கணிதசிந்தாமணியின் நூலிலிருந்து ஒரு குறிப்பு, 1939
பரகிதம் 3ஆம் பதிப்பு, (பக். 69)

– நாராயண சாஸ்திரிகளின் மகனான விஸ்வநாத சாஸ்திரிகள் மேற்கூறிய "வாக்கிய கரண கிரகணம்" என்னும் பகுதியை மட்டும் கி.பி. 1788இல் நூலாகச் செய்துள்ளார் என்று தெரிகிறது.

– சோதிசாஸ்திர நூலின் முகவுரையில் ஹொய்சிங்டன் பேராசிரியர் "வாக்கிய கரண கிரகணம்" என்னும் அதேபெயர்கொண்ட பழைய நூல் ஒன்றினைப் பின்பற்றியே விஸ்வநாத சாஸ்திரிகளின் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது, என்று கூறியுள்ளார் (இந்நூல் பக்கம் 18).

– விஸ்வநாத சாஸ்திரிகள் தமது தந்தையாரின் கணித சிந்தாமணி என்னும் நூலைப் பின்பற்றியே தமது 22 ஆவது வயதில் "வாக்கிய கரண கிரகணம்" நூலைச் செய்திருக்கவேண்டும் என்பதைப் பாரம்பரிய கல்விப் பின்னணியில் உய்த்தறியலாம்.

– ஆனால் ஹொய்சிங்டன் பேராசிரியரின் கூற்றுப்படி பழைய நூலை அப்படியே பின்பற்றாமல் சிற்சில மாற்றங்களை விஸ்வநாத சாஸ்திரிகள் தமது "வாக்கிய கரண கிரகணம்" நூலில் செய்துள்ளார் என்பதை அறியமுடிகிறது.



வாக்கிய கரண கிரகணமானது கிரகணங்களைக் கணிப்பதற்கான விதிகளை வகுத்துள்ள பகுதியாகும். விஸ்வநாத சாஸ்திரிகள் கிரகணங்களைக் கணிப்பதில் தனித்த ஆர்வம் காட்டியுள்ளார் என்பதை வரலாற்று நிகழ்வுகளின் வாயிலாக அறியமுடிகிறது.

1828ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதி மாலை 6 மணியளவில் ஏற்படவிருந்த சந்திர கிரகணத்தை விஸ்வநாதசாஸ்திரி கணித்துள்ளார். அக்கணிப்பில் நிமிட வித்தியாசங்களில் தவறு இருப்பதாக வட்டுக்கோட்டை செமினரி **பேராசிரியர் பூர்** (Rev. Dr. Poor) குறிப்பிட்டுள்ளார். இறுதியில் பூர் அவர்கள் ஐரோப்பிய அடிப்படையில் கணித்த கணிப்பே சரியாகியுள்ளது. விஸ்வநாத சாஸ்திரியவர்கள் கணித்த நேரத்துக்கு 15 நிமிடங்கள் முன்பாகவே சந்திரகிரகணம் ஏற்பட்டது. அதுமட்டுமன்றி சாஸ்திரிகள் கணித்த நேரத்திற்கு 24 நிமிடங்கள் அதிகமாகவும் சந்திரகிரகணம் நீடித்திருந்தது. சந்திர கிரகணத்தின் அளவுகளிலும், விஸ்வநாத சாஸ்திரியின் கணிப்பிற்கும் பூரின் கணிப்பிற்கும் இடையில் மாறுபாடுகள் காணப்பட்டன.

> In his 'Tamil Ephemeris' for 1828, Vesuvenathen had predicted an eclipse of the moon on the 21st March, at twenty-four minutes past six o'clock P.M., which was to obscure five-eighths of the disc. In this calculation the missionaries had discovered an error: only three-eighths of the disc were to be affected; and the eclipse was to begin fifteen minutes sooner and to continue for twenty-four minutes longer than had been foretold by the astronomer.

– Sir James Emerson Tennent, **1850**
Christianity in Ceylon, **(பக். 139–140)**

Rev. Dr. Daniel Poor
(1789-1855)

இதனால் ஐரோப்பிய வானியல் அறிவைப் பயன்படுத்தி தம்முடைய கணிக்கும் முறைகளில் சிற்சில மாற்றங்களை விஸ்வநாத சாஸ்திரிகள் செய்திருக்கவேண்டும். விஸ்வநாத சாஸ்திரிகளின் இச்செயற்பாடுகளிலிருந்து திருக்கணித பஞ்சாங்க மரபானது முளைவிடத் தொடங்கியதற்கான அறிகுறிகளைக் கண்டு கொள்ளலாம்.

வரருசி முனிவரின் வாக்கிய கரணம் :

வரருசி முனிவர், ***வடமொழியில் செய்த வாக்கிய கரணம்*** என்னும் ஜோதிட நூலின் மொழிபெயர்ப்பே நாராயண சாஸ்திரிகளின் கணித சிந்தாமணி என்பது முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளது. விஸ்வநாத சாஸ்திரிகள் தமது வாக்கிய கரண கிரகணத்தில் சிற்சில மாற்றங்களைச் செய்திருந்தாலும் அதன் அடிப்படை வரருசி முனிவரின் வாக்கிய கரணமே என்பது வெளிப்படை.

இங்கு நாம் கவனத்தில்கொள்ளவேண்டிய விடயம் ஈழத்து ஜோதிடத்தின் வானசாஸ்திரப் பகுதியின் ஆரம்பகால அடிப்படைகள் வரருசி முனிவரின் வாக்கிய கரணம் என்னும் நூலைப் பின்பற்றியே கட்டியெழுப்பப்பட்டுள்ளன என்பதாகும்.

❍ ❍ ❍

4

செகராசசேகரன் செய்வித்த 'கிரக சார எண்ணல்' – கி.பி. 1506

பாவலர் சரித்திர தீபகம் என்னும் நூலிலே 410 புலவர்களின் சரிதங்களை 1886ஆம் ஆண்டு ஆனல்ட் சதாசிவம்பிள்ளை உள்ளடக்கியுள்ளார். செகராசசேகரன் பற்றி சதாசிவம்பிள்ளை கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

> **"இவரோ (செகராசசேகரன்) வித்தியா விநோதராய் கலா முயற்சியிற் பிரீதியுற்று, வடதென் இந்திய இராச்சியங்களில் நின்று புலவர் பலரோடு சமஸ்கிருத கிரந்தங்களையும் தமிழ்க் கிரதங்களையும் அழைப்பித்து, நல்லூரிலே வித்துவச்சபை ஒன்று ஸ்தாபித்தாரன்றிச் சில கலா விசயங்களின் பேரில் மதுரையில் இருந்த கல்விமான்களோடு உசாவுவதற்காகச் சேது பரியந்தம்போய் வந்தார். அங்கங்கே தங்கியிருக்கும்போது, பலருக்கு படிசம்பளம் கட்டி, அரிய நூல்களை எழுதுவித்து யாழ்ப்பாணம் கொண்டுவந்து விருத்தி செய்தனர்."**
>
> **– ஆனல்ட் சதாசிவம்பிள்ள, 1886,**
> **(பாவலர் சரித்திர தீபகம், 7ஆவது பதிப்பு – 2006, பக். 161)**

கி.பி. 13ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1620இல் போர்த்துக்கேயரின் ஆட்சித் தொடக்கக் காலம்வரை **யாழ்ப்பாண அரசு** நிலவிவந்தமைக்கான தெளிவான ஆதாரங்கள் காணப்படு கின்றன. சில வரலாற்று ஆசிரியர்கள் யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றத்தை கி.பி. 1216ஆம் ஆண்டாகவும் சில வரலாற்று ஆசிரியர்கள் கி.பி. 1236ஆம் ஆண்டாகவும் கணித்துள்ளனர்.

யாழ்ப்பாண மன்னர்கள் முதலாவதாகச் சிங்கை நகரையும் அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பட்டினத்தையும் இறுதியாக

நல்லூரையும் தலைநகராகக்கொண்டு அரசாட்சி செய்துள்ளார்கள் என்பதை அறியமுடிகிறது.

மேற்குறித்த யாழ்ப்பாண இராச்சியக் காலப்பகுதியில் இரகுவம்மிசம், கண்ணகி வழக்குரை, தக்ஷிண கைலாச புராணம், திருக்கரைசைப் புராணம், செகராசசேகரமாலை, செகராசசேகரம், பரராசசேகரம், வையாபாடல், கோணேசர் கல்வெட்டு, கதிரைமலைப் பள்ளு, பரராசசேகரன் உலா, இராசமுறை ஆகிய நூல்கள் எழுந்துள்ளதாக ஈழத்து இலக்கிய வரலாறுகள் பதிவுசெய்து வந்துள்ளன.

முச்சங்கத்தின்பின்னர் யாழ்ப்பாண மன்னர்கள் பிரக்ஞைபூர்வ மாக **நான்காவது தமிழ்ச்சங்கத்தைத்** தோற்றுவித்துள்ளார்கள் என்பதனை அக்காலத்தில் எழுந்த, நூல்களின் வாயிலாகவும் அவர்கள் பரிபாலித்த சரஸ்வதி மஹாலய நூலகம் வாயிலாகவும் அறிய முடிகிறது. யாழ்ப்பாண மன்னர்கள் தமிழகத்தையும் இணைத்து தமிழ்ச்சேவைகளைச் செய்துள்ளனர். ஆனல்ட் சதாசிவம்பிள்ளை குறிப்பட்டதுபோல் யாழ்ப்பாண மன்னர்கள் தமிழகம்சென்று பல நூல்களைச் செய்வித்து அவற்றை யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வந்துள்ளனர்.

(இவைசார்ந்த ஆதாரங்களையும் விபரங்களையும் இந்நூலா சிரியரின் **யாழ்ப்பாண மன்னர் நிறுவிய தமிழ்ச்சங்கம்** என்னும் நூலில் காண்க)

யாழ்ப்பாண அரசு காலத்தில் எழுந்த நூல்களின் பின்னணியில் நாம் இரண்டு விடயங்களைக் கவனத்தில் நிலைநிறுத்திக்கொள்வது இங்கு பொருத்தமானதாகும்.

01. யாழ்ப்பாணத்து மன்னர் காலத்தில் எழுந்த நூல்களில் இரகுவம்மிசம் (காவியம்), செகராசசேகரமாலை (ஜோதிடம்), செகராசசேகரம் (வைத்தியம்), பரராசசேகரம் (வைத்தியம்), தக்ஷிணகைலாச புராணம் (தலபுராணம்) ஆகியன வடமொழியிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்ட நூல்களாகும்.

02. யாழ்ப்பாணத்து மன்னர் காலத்தில் எழுந்த பலநூல்களில், செகராசசேகரன் அல்லது பரராசசேகரன் அந்நூலைச் செய்வித்தான் என்ற குறிப்புகளையும் அவர்களின் புகழ்பாடும் குறிப்புகளையும் பரவலாகக் காணமுடியும்.

செகராசசேகரன் செய்வித்த கிரகசார எண்ணல் :

*1848*ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை செமினரியில் கற்பிப் பதற்காக அச்சிடப்பட்ட சோதிசாத்திரம் என்னும் நூலின் முகவுரையில் (பதிகம்) காணப்படும் குறிப்பை தற்பொழுது நுணுகி ஆராய்வது பொருத்தமாகும்.

கி.பி. 1506

செகராசசேகரன்

கிரகசார எண்ணல்

ஈழம்

> கி-பி. ௧௫௦௬ம்.வருஷமளவில்செகராசசேகரனென்னும் இராசனுடைய அநுமதிப்படி வரருசீ என்பவராற் செய்யப்பட்ட கிரகசார எண்ணல் இதனுடன் சேர்க்கப் பட்டிருக்கின்றது. இது வாக்கிய கரணமுறை. இத்தீவிலிருக்குஞ் சோதிடர்கள் இதின் வழியாய் அதிக நுட்பமான பலன்களைக் காணலாமென்று பெரும்பாலும் இதையே எடுத்துக்கொள்ளுகிறார்கள்.

– சோதிசாத்திரம் (வட்டுக்கோட்டை செமினரி பாடநூல்), 1848 பதிகம், (பக். 17)

கி.பி. *1478* - கி.பி. *1519* வரையான காலப் பகுதியில் யாழ்ப் பாணத்தை **சிங்கை பரராசசேகரன் என்னும் ஆறாம் பரராசசேகரன்** அரசாட்சி செய்துள்ளான். இவன் காலத்திலேதான் உன்னதமான தமிழ்த் தொண்டுகள் ஈழத்திலே நடைபெற்றுள்ளன. இக்காலகட்டத்திலே இவன் தம்பி சிங்கை செகராசசேகரனாலும் தமிழ்த் தொண்டுகள் செய்யப்பட்டுள்ளன என்ற பரவலான குறிப்புக்களையும் நாம் காண்கின்றோம்.

கிரகசார எண்ணல் என்னும் மேற்குறிப்பிட்ட நூலானது கி.பி. *1506*ஆம் ஆண்டு செகராசசேகரனின் வேண்டுகோளின்படி செய்யப்பட்டுள்ளது என்னும் தகவலானது வரலாற்றுடன் பொருந்தி வருவதைக் காணமுடிகிறது.

கிரகசார எண்ணல் நூலின் உள்ளடக்கம் :



வரருசி முனிவரின் வாக்கிய கரணம் நூலின் *சார* **கணனம்** என்னும் பகுதியான கிரக சாரத்தை இந்நூலானது உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. *1848*இல் பதிப்பித்த சோதிசாத்திர நூலில் கிரகசாரத்துக்குரிய *26* விதிகளைக் காணமுடிகின்றது.

கிரக புடகம்	01 - 07	7 **விதிகள்**
வக்கிர புடகம்	08 - 09	2 **விதிகள்**
பெயர்ச்சி எண்ணும்படி	10 - 12	3 **விதிகள்**
அநுவக்கிரகம் எண்ணும்படி	13 - 22	10 **விதிகள்**
மந்தோச்சமாவது	23 - 23	1 **விதி**
துருவப்பெயர்ச்சி	24 - 24	1 **விதி**
இராகு புடகம் எண்ண வகை	25 - 25	1 **விதி**
இராகுவுக்குச் சாரம் எண்ண வகை	26 - 26	1 **விதி**

கிரகசார எண்ணல் நூலின் மூல வடிவத்திலே மேலே குறிப்பிட்ட 26 விதிகளைத்தவிர பிறவிடயங்களும் உள்ளடக்கப் பட்டிருந்தனவா என்பதை அறியமுடியவில்லை. கி.பி. 1506 இல் எழுந்த நூல் என்ற அடிப்படையில் இந்நூலானது பாடல்களால் ஆக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் 26 விதிகளும் வசன வடிவத்தில் தரப்பட்டுள்ளதால் பாடல்களுக்காகப் பிற்காலத்தில் எழுதப்பட்ட உரைகளையே **ஹொய்சிங்டன்** தமது **சோதிசாத்திரம்** என்னும் நூலில் உள்ளடக்கியுள்ளார் என்பதை உய்த்தறியவேண்டியுள்ளது.

அத்துடன் கி.பி. 1506இல் எழுந்த கிரகசார எண்ணல் என்னும் இந்த நூலையே கி.பி. 1848இலும் ஈழத்திலிருந்த ஜோதிடர்கள் பயன்படுத்தியுள்ளார்கள் என்பது தெரியவருகின்றது. வாக்கிய முறையில் அமைந்த இந்நூலின் வாயிலாக அதிக நுட்பமான ஜோதிட பலன்களைக் காணமுடியும் என்று கி.பி. 1848இல் ஈழத்தில் இருந்த ஜோதிடர்கள் கருதியுள்ளனர்.

கிரகசார எண்ணல் ஒரு மொழிபெயர்ப்பு நூல் :

"கி.பி. 1506 வருஷமளவில் செகராசசேகரன் என்னும் இராசனுடைய அநுமதிப்படி வரருசி என்பவராற் செய்யப்பட்ட கிரகசார எண்ணல் இதனுடன் சேர்க்கப்பட்டுள்ளது" என்கின்ற **ஹொய்சிங்டன்** பேராசிரியரின் குறிப்பானது சற்று குழப்பத்தைத் தருவதாய் அமைந்துள்ளது. **வரருசி** என்கின்ற முனிவர் வடமொழியிலேயே ஜோதிட நூல்களைச் செய்துள்ளார் என்று பிறஜோதிட நூல்கள் பதிந்துள்ளன. அத்துடன் வரருசி என்பவர் கி.பி. 1506ஆம் ஆண்டுக்கு முந்திய காலத்தவர். இந்தக் குழப்பத்துக்கான திருத்தத்தினை ஹொய்சிங்டன் அவர்களே பிறிதொரு சந்தர்ப்பத்தில் பதிவுசெய்துள்ளார்.

> கிரக புடம்.
>
> இம்முறை விக்கிரமாதித்த இராசனினது சபையிலிருந்த நவரத்தின புலவரில் ஒருவராகிய வரருசியினல் முன்னர் வடமொழியிற் செய்யப்பட்டும் பின்னர் செகராசசேகரன் என்ற அரசனினது அனுமதிப்படி இற்றைக்குமுன் ௩௪0 வருடமளவிலே தமிழாய் மொழிபெயர்க்கப்பட்டுமிருக்கின்றது.

– சோதிசாத்திரம் (வட்டுக்கோட்டை செமினரி பாடநூல்), 1848 பதிகம், (பக். 45)

மேற்காட்டிய குறிப்புகளிலிருந்து நாம் கீழ்க்கண்ட விடயங்களை அறியமுடிகிறது.

- **வரருசி முனிவர் வடமொழியில் செய்த ஜோதிட நூலை அல்லது ஜோதிட நூலின் பகுதியை ஈழத்து செகராசசேகரன் கி.பி. 1506 இல் தமிழில் மொழிபெயர்க்க வகை செய்துள்ளான்.**

- **கி.பி. 1506 இல் செகராசசேகரன் என்னும் பெயருடைய மன்னன் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்ததாக தற்பொழுது எமக்குக் கிடைக்கும் வரலாற்றுப் பதிவுகளில் இல்லை. அரச பரம்பரையைச் சார்ந்த ஒருவனான (மன்னனின் தம்பியான) செகராசசேகரன் தன்னை மன்னர் பரம்பரையென்று (மன்னனென்று) நூல்களில் பதிந்திருக்கலாம். அல்லது தற்பொழுதுள்ள யாழ்ப்பாண அரசாட்சி வரலாற்றில் கி.பி. 1506 காலப்பகுதியில் செப்பனிடல் செய்யப்படவேண்டிய தேவையை முன்வைக்கலாம்.**

- **யாழ்ப்பாண மன்னர் காலப்பகுதியில் எழுந்த நூல்களில் பல மொழிபெயர்ப்பு நூல்களாக அமையப்பெற்றமையால், கிரகசார எண்ணல் நூலும் ஒரு மொழிபெயர்ப்பு முயற்சி என்னும் கருத்தானது வரலாற்றுப் பதிவுகளுடன் பொருந்திவருகின்றது.**

- **யாழ்ப்பாண மன்னர் காலத்தில் எழுந்த செகராசசேகரமாலை என்பதும் ஒரு மொழிபெயர்ப்பு சோதிடநூல் என்பது இங்கு பொருத்தி நோக்கவேண்டிய விடயமாகும்.**

- **அத்துடன் செகராசசேகரமாலை சோதிட நூலில் மகளிர்வினைப்படலம், மைந்தர்வினைப் படலம், மணவினைப் படலம், கூழ்வினைப் படலம், பலவினைப் படலம், வேந்தர் வினைப்படலம், கோசரப் படலம், யாத்திரைப்படலம், மனைவினைப்படலம் என்னும் கிரகசார எண்ணல் நூலில் உள்ளடங்காத விடயங்கள் காணப்படுகின்றன. ஆகவே கிரகசார எண்ணல் மற்றும் செகராசசேகரமாலை ஆகிய ஜோதிட நூல்களின் மொழிபெயர்ப்புப்பணிகள் யாழ்ப்பாண மன்னர்களால் திட்டமிடப்பட்டு செய்யப்பட்டுள்ளன என்பதை உய்த்தறியமுடிகிறது.**

- **கிரகசார எண்ணல் நூலினை செகராசசேகரனின் ஆணைப்படி தமிழில் மொழிபெயர்த்த புலவரின் பெயரை அறியுமாறில்லை.**

செகராசசேகரமாலை வடமொழி நூலொன்றின் மொழிபெயர்ப்பாக அமைந்துள்ளது. இந்நூலிலிருந்து எடுத்துக்காட்டாக ஒரு செய்யுள் பின்வருமாறு:

> வனைந்துமா முனிவோர் சொன்ன வடகலைச் சோதிடத்தைப்
> புனைந்ததென் கலையாற் சட்டை பூட்டிய விதனைக்கேட்டு
> முனிந்திட வேண்டா நல்லோர் முற்றுமா ராய்ந்துகுற்ற
> நினைந்ததை யகற்றி நன்காய் நிச்சயித் திடுகை நீரே.

– துரை மனோகரன், 1997
இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி, (பக். 12)

❍ ❍ ❍

5

‘கிரகசார எண்ணல்’ நூலின் ஆசிரியர்

செகராசசேகரனின் அனுமதிப்படி வரருசி முனிவரின் நூலினைத் தமிழில்செய்த புலவரின் பெயரானது அறியுமாறில்லை. இருப்பினும் சில ஊகங்களை மேற்கொள்ளமுடியும்.

செகராசசேகரமாலையின் ஆசிரியர் :

யாழ்ப்பாண அரசு காலத்தில் எழுந்த பிறிதொரு ஜோதிட மொழிபெயர்ப்புநூல் செகராசசேகரமாலை ஆகும். இந்நூலை யாழ்ப்பாண மன்னர் பரம்பரையின் உறவினரான **சோமசன்மா** என்னும் அந்தணன் செய்ததாக அறியப்படுகின்றது. சோமசன்மாபற்றி பேராசிரியர் **ஆ. சதாசிவம்** கீழ்வருமாறு பதிவு செய்துள்ளார்.

> யாழ்ப்பாணத்துச் சிங்கைநக ரரசனான செகராச சேகரனால் இயற்றுவிக்கப்பட்டது செகராச சேகரமாலை என்னுஞ் சோதிட நூல். இந்நூலாசிரியர் பெயர் சோம சன்மா. தந்தையார் இராமேசசன்மா என நூற்சிறப்புப் பாயிரம் கூறுகின்றது. நூலெழுந்த காலம் செகராச சேகரனின் ஆட்சிக் காலமாகிய 1380—1414 ஆகும்.
>
> நூலாசிரியராகிய சோமசன்மா என்பவர் இராமேச் சரத்தில் அரசுரிமை கொண்ட சேதுபதிகளின் வழித் தோன்றலாகிய செகராசசேகர மன்னனின் உறவினருள் ஒருவர் என்பது தெரிகின்றது.

– ஆ. சதாசிவம், 1966
ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், (பக். 21)

பேராசிரியர் ஆ. சதாசிவத்தின் கருத்துப்படி செகராசசேகர மாலை நூலானது கிரகசார எண்ணல் நூலுக்கு ஏறத்தாழ *100* வருடங்களுக்கு முன்னர் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அத்துடன் இராமேச்சரத்திலிருந்து வந்த அந்தணப் பரம்பரையில் வந்தோரினால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. **செகராசசேகரமாலையின் உள்ளடக்கமானது ஜோதிடத்தின் வானசாஸ்திரப் பகுதியை உள்ளடக்கவில்லை** என்பது முன்னரே (இந்நூல் பக்கம் *32*) குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப்பின்னணியில் சோமசன்மாவின் பரம்பரையினர் கிரகசார எண்ணல் மொழிபெயர்ப்பில் அதிகம் ஈடுபட்டிருக்க வாய்ப்பில்லை எனக் கருதலாம்.

ஈழத்தில் பஞ்சாங்கம் கணிக்கும் பரம்பரை :

தற்பொழுது வாக்கிய பஞ்சாங்கம், திருக்கணித பஞ்சாங்கம் என்னும் இருகிளைகள் ஈழத்தில் காணப்பட்டாலும் பஞ்சாங்கம் கணிக்கும் மரபானது கி.பி. *15-4-1667* இல் இராமலிங்க முனிவரால் தொடங்கப்பட்டது என்பது அனைவரும் அறிந்ததே. **இராமலிங்க முனி வரின்** வழிவந்தோர், **வரருசி முனிவரின்** ஜோதிட நூல்களில் காட்டிய ஈடுபாட்டினை இவ்விடத்தில் குறித்துக்காட்டுவது பொருத்தமானதாகும்.

- **கி.பி. 1788 இல் நா. விஸ்வநாத சாஸ்திரியவர்கள் வரருசி முனிவரின் வாக்கிய கரணத்தை அடிப்படையாகக்கொண்டு வாக்கிய கரண கிரகணம் என்னும் நூலைச் செய்துள்ளார்.**
- **கி.பி. 1700களின் ஆரம்ப காலகட்டத்தில் ந. நாராயண சாஸ்திரியவர்கள் வரருசி முனிவரின் வாக்கிய கரணத்தை கணித சிந்தாமணி என்னும் நூலாக மொழிபெயர்த்துள்ளார்.**
- **கி.பி. 1667 இல் இராமலிங்க முனிவரும் வரருசி முனிவரின் வாக்கிய கணிதத்தை அடிப்படையாக வைத்தே தமது பஞ்சாங்கத்தைக் கணித்துள்ளார்.**
- **இராமலிங்க முனிவரானவர் கி.பி. 1667 இல் ஈழத்தின் முதலாவது பஞ்சாங்கத்தைக் கணிக்கும்போது அவருக்கும் வயது 18. ஆகவே இராமலிங்க முனிவருக்கு அவரின் தந்தை சந்திரசேகர ஐயராலும் பரம்பரைக் கல்விமுறையாலும் வரருசி முனிவரின் நூல்கள் கற்பிக்கப்பட்டிருக்கவேண்டும் என்பதை உறுதியாகக் கூறலாம்.**

> இந்நூலாசிரியருடைய முற்சந்ததியினருளொருவராய், தில்லைத்தீக்ஷித பரம்பரையைச் சார்ந்து திருவானைக்காவில் ஸ்ரீஜம்புகேசுவராலய அருச்சகருளொருவராயிருந்து பின்னர் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தை அரசுபுரிந்த கூழங்கைச் சக்கிரவர்த்தியால் சமஸ்தான ஜோதிஷராக யாழ்ப்பாணத்துக்கு அழைக்கப்பெற்று வந்து நல்லூரிற் குடியேறிய ஆதிசைவப்பிராணகுலதிலகரொருவரின் வழித்தோன்றலாகிய சந்திரசேகரசாஸ்திரிகள் புத்திரர் இராமலிங்கமுனிவரே இலங்கையில் இற்றைக்கு ௨௭௨ வருடங்களுக்கு முன்னே சகாப்தம் ௧௫௯௦-ல் நிகழ்ந்த பிலவங்க வருடத்தில் ஆரியபடசித்தாந்தத்தை ஆதாரமாகக் கொண்டு வரருசி முனிவர் அருளிச்செய்த வாக்கிய முறைப்படி முதன்முதற் பஞ்சாங்கங் கணித்து வெளிப்படுத்தியவராவர்.

– இ.சி.இரகுநாத ஐயர், 1939
பரகிதம் 3ஆம் பதிப்பு, நூலாசிரியர் வரலாறு (பக். 6)

- **இதன்படி இராமலிங்க முனிவரின் தந்தையாரின் காலத்திலும் வரருசி முனிவரின் வாக்கிய கணிதத்தில் இப்பரம்பரையினர் ஈடுபாடு காட்டியுள்ளனர் என்பது தெளிவாகிறது.**

- **இராமலிங்க முனிவர்பற்றிக் கிடைக்கும் வாழ்க்கைக்குறிப்பிலிருந்து இவரின் பரம்பரையினர் யாழ்ப்பாண மன்னரின் சபையில் ஆஸ்தான ஜோதிடராகப் பணியாற்றியுள்ளனர் என்பதையும் அறியமுடிகிறது.**

- **ஜோதிடக் கலையானது அன்று தொடக்கம் இன்றுவரை பரம்பரை பரம்பரையாகவே கையளிக்கப்பட்டு வருகின்றது. அதிலும் ஜோதிடத்தின் அதிநுட்பமான வானசாஸ்திர அறிவானது பரம்பரைக்கூடாக மாத்திரமே கடத்தப்பட்டு வந்துள்ளது என்பதற்கு ஈழத்தில் தற்போது இருக்கின்ற வாக்கிய மற்றும் திருக்கணித பஞ்சாங்க மரபுகள் சாட்சியமாகின்றன. மேலும் அச்சுவசதி, ஊடகவசதியற்ற கி.பி. 1500–1600களில் வானசாஸ்திர கணித அறிவானது பரம்பரைக்கூடாக மட்டமே கடத்தப்பட்டிருத்தல் சாத்தியமானதாகும்.**

- **இதனடிப்படையில் இராமலிங்க முனிவருக்கு 5–6 தலைமுறைகளுக்கு முந்திய ஒருவராலேயே கிரகசார எண்ணல் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை பிற ஆதாரங்கள் கிடைக்கும்வரை உறுதியாக உய்த்தறியமுடிகிறது.**

❍ ❍ ❍

6

நிறைவாக

ஈழத்து தமிழ் வரலாற்றில் இதுவரை கவனத்தில் கொள்ளப்படாத கிரகசார எண்ணல் நூலினை உயிர்ப்பித்தெடுக்கும் நோக்குடன் எழுதப்பட்ட அறிமுகக் கட்டுரையாக இது அமைகின்றது. இக்கட்டுரையின் வாயிலாக கீழ்க்கண்ட முடிவுகள் முன்வைக்கப் படுகின்றன.

முதல்நிலை முடிவுகள் :

- **வரருசி முனிவரின் நூலை மொழிபெயர்த்து கி.பி. 1506இல் கிரகசார எண்ணல் என்னும் நூலானது செகராசசேகரனின் அனுசரணையுடன் வெளிவந்துள்ளது.**
- **கி.பி. 1848இல் வெளியான சோதிசாஸ்திரம் என்னும் நூலிலிருந்தே கிரகசார எண்ணல் நூலினைப்பெறமுடிகிறது. உரைவடிவத்திலிருக்கும் நூலின், மூலவடிவத்தையோ முழுமையான உள்ளடக்கத்தையோ அறியமுடியவில்லை.**
- **ஜோதிடத்தின் வானசாஸ்திரப் பகுதியை உள்ளடக்கியுள்ள இந்நூலானது இன்று எமக்குக் கிடைக்கப்பெறும் நூல்களில் ஈழத்தில் அவ்வகையில் எழுந்த முதலாவது நூலாகும். ஈழத்தில் எழுந்த சரசோதிமாலையும் செகராசசேகரமாலையும் வானசாஸ்திரப்பகுதியை உள்ளடக்கவில்லை என்பதும் கவனத்தில்கொள்ளத்தக்கது.**
- **யாழ்ப்பாண இராச்சிய காலத்தில் எழுந்த நூல்களின் பட்டியலில் இதுவரை கிரகசார எண்ணல் நூலானது சேர்க்கப்படவில்லை.**

– இதுவரை கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையில் ஈழத்தில் 350 வருடங்களாக பஞ்சாங்கம் கணிக்கும் பரம்பரையின் மூதாதையரில் ஒருவர் கிரகசார எண்ணல் நூலின் ஆசிரியராக (தமிழில் மொழிபெயர்த்தவராக) இருத்தல்வேண்டும்.

துணைநிலை முடிவுகள் :

– ஈழத்திலே இன்று எமக்கு அறியமுடிகின்ற அனைத்துப் புலமைத்துவ மரபுகளிலும்பார்க்க நீண்டதொரு ஆவணப்படுத்தப்பட்ட தமிழ் ஜோதிட புலமைத்துவ மரபு காணப்படுகின்றது. அனேக தமிழ்ச் சேவைகள் ஆற்றியுள்ள இப்புலமைத்துவ மரபையும் ஈழத்து தமிழ் வரலாற்றில் பொருத்தி வரலாறுகள் எழுதப்படல்வேண்டும்.

– கி.பி. 1506 தொடக்கம் ஒவ்வொரு நூற்றாண்டுகளிலும் வானசாஸ்திரம் சார்ந்த புலமைத்துவ முயற்சிகள் எமக்குக் கிடைத்துள்ளன.

1506 – கிரகசார எண்ணல்

1667 – முதலாவது வாக்கிய பஞ்சாங்கம்

1788 – வாக்கிய கரண கிரகணம்

1887 – முதலாவது திருக்கணித பஞ்சாங்கம்

வானசாஸ்திரத்துடன்சார்ந்த இப்புலமைத்துவ முயற்சிகள் இதுவரை தொகுத்து ஆராயப்படவில்லை. ஈழத்து தமிழ் வரலாற்றில் இவற்றின் வகிபாகம் துணியப்படல்வேண்டும்.

– கி.பி. 1506 எழுந்த கிரகசார எண்ணல் என்னும் நூலின் உள்ளடக்கமானது ஈழத்துப் பஞ்சாங்க மரபினரால் ஆராயப்படல்வேண்டும். கி.பி. 1667 இல் முதலாவது பஞ்சாங்கம் தோன்றியிருந்தாலும் அதற்கான அடிப்படை முயற்சிகள் இதற்கு 150 வருடங்களுக்குமுன்னர் கிரகசார எண்ணல் நூலில் ஆரம்பித்தமைக்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

– கி.பி. 1506 இல் செகராசசேகரன் என்னும் பெயருடைய மன்னன் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்ததாக தற்பொழுது எமக்குக் கிடைக்கும் வரலாற்றுப் பதிவுகளில் இல்லை. அரச பரம்பரையைச் சார்ந்த ஒருவனான (மன்னனின் தம்பியான) செகராசசேகரன் தன்னை மன்னர் பரம்பரையென்று (மன்னனென்று) நூல்களில் பதிந்திருக்கலாம். தற்பொழுதுள்ள யாழ்ப்பாண அரசாட்சி வரலாற்றில் கி.பி. 1506 காலப்பகுதி செப்பனிடல் செய்யப்படவேண்டிய தேவையை முன்நிறுத்துகின்றது.

யாழ்ப்பாண இராச்சிய காலத்தில் எழுந்த கிரகசார எண்ணல் நூல்சார்ந்த விடயங்களை மீட்டெடுப்பதற்கு அச்சாணியாக இருந்தது, வட்டுக்கோட்டை செமினரியில் அதிபராகவும் பேராசிரியராகவும் பணிபுரிந்த **ஹொய்சிங்டன்** (H. R. Hoisington) செய்த **சோதிசாஸ்திரம்** என்னும் நூலாகும். கிரகசார எண்ணல் நூலில் கூறப்பட்டுள்ள விதிகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும் அச்சிட்டுள்ளார். ஈழத்துத் தமிழ்ப் பரப்பை விரிவுபடுத்த உதவிய ஹொய்சிங்டன் பேராசிரியருக்கு ஈழத்துத் தமிழுலகம் கடமைப்பட்டுள்ளது.

ஐந்நூறு வருடங்களுக்குத் தொடர்ச்சியான நூல்களும் ஆதாரங்களும் கிடைக்கின்ற ஈழத்து ஜோதிடத்தின் வரலாறு எழுதப்படவேண்டிய தேவையை முன்நிறுத்தி இக்கட்டுரையை நிறைவுசெய்வது பொருத்தமாகும்.

❍ ❍ ❍

கிரக சார எண்ணல்

கிரக புடம்.

இம்முறை விக்கிரமாதித்த இராசனினது சபையிலிருந்த நவரத்தின புலவரில் ஒருவராகிய வரருசியினால் முன்னர் வடமொழியிற் செய்ய ப்பட்டும் பின்னர் செகராசசேகரன் என்ற அரசனினது அனுமதிப் படி இற்றைக்குமுன் ௩௪0 வருடமளவிலே தமிழாய் மொழிபெயர்க் கப்பட்டுமிருக்கின்றது.

௧. செவ்வாய் முதல் ஐந்துகிரகத்துக்கும் புடமெண்ணு ம்படி நாழிகையாதியாக இட்டசுத்ததினம்வைத்து இதி லே அவரவருடைய சோத்தியவாக்கியத்தில்எடுக்கப்போ ந்த வாக்கியங்கொண்டெடுத்து எடுத்தவாக்கியத்தின் அங் தத்தில் மும்மூன்றெழுத்துத் துருவாக்கரம் என்று மேலே வைப்பது.

௨. பின்பு தனத்தைத் தனத்தோடேயும் இருணத்தை இருணத்தோடேயுங் கூட்டித்தனத்துருவம் மேல்வை த்து இருணத்துருவங்கீழ்வைத்துப் பெரியதிற்சிறியதுக ளைந்து நின்றகலையை அறுபதாலேறிடவுண்டானால் ஏறி ட்டுக்கலை மிகுந்தாற் பாகையாக்கி நின்றது அந்தந்தக்கிர கங்களுக்குத் துருவமாம்.

௩. நின்றசேடத்தைப் பரிவிருத்தி வாக்கியத்துக்கீந்து பெற்றபலம் கேதபரிவிருத்தியாம். நின்றது வருடாதி சேடமாம்.

௪. இதில் எடுக்கப்போந்த இலக்கத்தை எடுத்து நின்ற து தினசேடமாம். இலக்கம் எடுத்த வாக்கியத்தைஇடது புறத்திலே வைத்து அதற்குப்பிந்தின வாக்கியத்தை வல துபுறத்திலே வைத்து இந்த வாக்கியங்களிலே சுத்தம்ப ண்ண வேண்டுமெழுத்துச் செவ்வாய்க்கிரண்டு, புதன் ச னி வியாழன் இந்த மூன்றுகிரகத்துக்கும் ஒவ்வொரு எ ழுத்து, வெள்ளிக்கிரண்டெழுத்து இந்த எழுத்துக்களைக் கொண்டு அவரவர் துருவத்தைப் பெருக்கிக் கீழ்ப்படி அ றுபதாலேறிட்டு அர்த்தாதிகங்கொடுத்து வாங்கிப்போட்டு நின்றதை அறுபதாலேறிடவுண்டானால் ஏறிட்டு நின்றபா

Vakya System for five Planets.

The following process for the planetary phenomena is from a still different author, who is said to have flourished in the reign of the king *Sakarasasekara*, about A. D. 1500.

The *Vakyas* used in this system are said to have been originally constructed by *Vararushi*, one of the "nine gems" of Vikramaditya's court.

This is the process usually followed at the present time in this Province.

To calculate the geocentric longitudes of the five following planets; viz: *Mars*, *Mercury*, *Jupiter*, *Venus*, and *Saturn*.—

RULE 1. Set down *Sutta Tinam*, for the given time, and subtract from it such and as many of the *Sodya Vakya*, as can be, and write down the remainder; taking care to note down the corresponding *Druvakkaram*, from the *Sodya Vakya*, (See Tab. Nos. XVI.—XX.) with the proper signs.

2. Then add together the *Druvakkarams* prefixing, to the sum, the proper sign.—This gives *Druvam*; i. e. *The distance of aphelion from the first point of Aries.*

3. Divide the *days* and *Nalikies*, remaining in No. 1, by the last number in the second column in the table 3 *Parivritti*. (See Tables No. XXI.—CII.)

NOTE. This tabular number expresses the days in a synodic revolution of the planet. *Parivritti* means *revolution*.

The quotient in this case is called *Katha Parivritti* (or revolutions passed,) and indicates which of the tables is to be used at the time. The remainder is called *Varuda Sesha* (which is a portion of the revolution.) and indicates which of the *longitudes* in the table is to be taken.

4. From the last column of the table to be used, take the number of *days*, equal to, or next less than, the *Varuda Sesha*. If it be less than *Varuda Sesha*, take and note down the difference between them, which is called *Tina Sesha*.

கை கலையை அந்த வாக்கியத்திலே தனமுந் தனமுமாகிலு
ம் இருணமும் இருணமுமாகிலுங் கூட்டி, ஒன்று தன
ம் ஒன்றிருணமானாற் களையச் சுத்தவாக்கியங்களாம்.

ரு. புதன், வியாழன், சனி இந்தமூன்றுகிரகத்துக்கும் ஒவ்வோரேழுத்தாகையினாலே ஒவ்வோரு எழுத்துக்கொண்டு துருவத்தைப் பெருக்கிச் செவ்வாய்க்குப்போலே வாக்கியங்களைச் சுத்தம்பண்ணிக்கொள்க. வெள்ளிக் கிரண்டெழுத்தாகையினாலே தனத்துருவமானால் முன்னெழுத்துக்கொண்டும், இருணத்துருவமானாற் பின்னெழுத்துக்கொண்டுஞ் சுத்தம்பண்ணுவது.

சு. எல்லாக்கிரகத்துக்கும் முன்வாக்கியம் பூருவம், பின்வாக்கியம் அபரம். அபரவாக்கியத்திலே பூருவவாக்கியத்தைக் களைந்து நின்றபாகையைக் கலையாக்கி மீளவுஞ் சுன்போட்டு, சு. ஆல் பெருக்கி விகலையாக்கி இலக்காந்தரத்துக்கீந்து பெற்றபலம் புத்தியாம்.

எ. இந்தப் புத்தியைக்கொண்டு தினசேடத்தைப்பெருக்கி இருபடியும் அறுபதால் ஏறிட்டு அர்த்தாதிகங்கொடுத்து வாங்கிப்போட்டு நின்றகலையைப் பூருவவாக்கியத்திலேகூட்டித் துருவமுந் தனமாகிற்கூட்டி இருண்மாகிற் களைந்து நின்றது அந்தந்தக் கிரகங்களுக்குச் சுத்தப்புடமாம்.

வக்கிர புடம்.

அ. இந்த ஐந்து கிரகத்துக்கும் வக்கிரமானகாலத்திலே பூருவவாக்கியம் பெருத்து அபரவாக்கியஞ் சிறுத்திருக்கும். பூருவவாக்கியத்தை இருபடிவைத்து ஒருபடியிலே அவரவர் அபரவாக்கியத்தைக்களைந்து நின்றபாகையைக் கலையாக்கி மீளவுஞ் சுன்போட்டு, சு.ஆல் பெருக்கி இலக்காந்தரத்துக்கீந்து பெற்றபலம் புத்தியாம்.

கூ. இந்தப் புத்தியைக்கொண்டு தினசேடத்தைப்பெருக்கி இருபடியும்அறுபதாலேறிட்டு அர்த்தாதிகங்கொடுத்து நின்றகலையைப் பூருவவாக்கியத்திலேகளைந்து துருவமுந் தனமாகிற்கூட்டி இருணமாகிற் களைந்து நின்றது வக்கிர புடமாம்.

பெயர்ச்சி எண்ணும்படி.

ய. இந்தக் கிரகங்கள் எந்தஇராசியிலே நிற்கின்றனவே

Set down also the longitude from the first column in the table called the *Puruva Vakya*, corresponding to the days taken out, and the longitude next below which is called *Apara Vakya*. Then take out the *corrections* in the table corresponding to these longitudes, and multiply both by the *Druvam* found in No. 1. These products are to be applied, each to its respective *longitude*.

In the case of *Venus*, there are two *corrections* given. If the *Druvam* be a negative quantity, the first correction is to be used; but if the *Druvam* be *positive*, the second correction is to be used.

6. Subtract the *Puruva Vakya* from the *Apara Vakya*, and reduce the *remainder* to *minutes*. Then add a cypher to these minutes, and multiply the whole by 6, and divide the product by the number of days (called *Ilakkantaram)* occurring between the tabular days corresponding to the longitudes taken out. The quotient is the daily motion, called *Putti*.

Note. The process here is simple; it takes the longitude for a certain number of days, reduces it to seconds, and then divides by the number of days. This gives the daily motion in seconds.

7. Multiply the *Tina Sesha* by the *Putti*, and add it to the *Puruva Vakya*. To this sum add the *Druvam*, and the result will be the planet's *geocentric longitude*.

Retrogradation.

8. When these planets are in their retrograde course, the *Puruva Vakya* will be greater than the *Apara Vakya*.

In this case set down the *Puruva Vakya* in two places. From one subtract the succeeding, or *Apara Vakya*, reduce the remaining degrees, &c. to minutes, add a cypher, and multiply the same by 6, and divide the product by the *Ilakkantaram*; and the quotient will be the *Putti*.

9. Multiply the *Tina Sesha* by this *Putti*, and subtract the product from the *Puruva Vakya*; to the remainder add *Druvam*. The result will be the longitude at which the planet begins to retrograde.

ன்றறிந்து அந்தஇராசியிற் பிரமாணத்தைமேலேவைத்து அந்தக்கிரகங்களுடைய துருவத்தை இருணத்துருவமானால் இராசியின்கீழே பாகைகலையாகவைத்துத் தனத் துருவமானால் அந்த இராசியிலே களைந்து நின்றது இட்டமாம். இட்டத்தைச் சர்ப்பாகாரமாய்வைத்து இதற்குக் குறைந்தவாக்கியத்தை இட்டத்தின்கீழே வைத்து இதற்குப் பின்வாக்கியத்தை வலது புறத்திலே வைத்து வாக்கியங்களை வாக்கிய சுத்தமாக்கி நின்றது முதல் வாக்கியம்பெருத்தால் வக்கிரசாரமென்றும் பின் வாக்கியம் பெருத்தாற் சுபாவசாரமென்றும் அறிக. சுபாவசாரஞ் சுத்தம்பண்ணியிருந்தால் பின் வாக்கியத்திலே முன் வாக்கியத்தைக் களைந்து நின்றபாகத்தைக் கலையாக்கி மீளவுஞ் சுன்போட்டு ஆறுற் பெருக்கி இலக்காந்தரத்துக்கீந்து பெற்றபலம் புத்தியாம்.

௰க. இந்தப் புத்திக்குமேலே இட்டத்தை வைத்து முன் வாக்கியமாகச் சுத்தம்பண்ணி இந்த வாக்கியத்தை இட்டத்திலேகளைந்து நின்ற பாகையைக்கலையாக்கி மீளவுஞ் சுன்போட்டு விகலையாக்கி முன்வைத்த புத்திக்கீந்தபலங் தினமாம். நின்றசேடத்தை அறுபதாற்பெருக்கி முற்கருவிக்கீந்து பெற்றபலம் நாழிகையாம்.

௰உ. இதிலே முன் வாக்கியத்து இலக்கத்தையுங் கூட்டி வருடத்திற்பின்பு பரிவிருத்திசென்றுற் கேதபரிவிருத்தியிலே எல்லா வாக்கியத்திலும் பின் வாக்கியத்து இலக்கத்தையுங் கூட்டி வருடாதி சேடங்களைந்து மாதவாக்கியமுங் களையவுண்டானுற் களைந்து இன்னமாதம் இத்தனையாந்தேதி இத்தனையா நாழிகையிலே பெயருமென்றறிக.

அநுவக்கிரம் எண்ணும்படி.

௰ஈ. இட்டத்தைச் சர்ப்பாகாரமாக வைத்து இதிலே ஒரு இராசிகளைந்து நின்றது அநுவக்கிர இட்டமாம். வக்கிரமுதல் நிமிர்ச்சியளவும் பார்த்தால் இட்டத்துக்குக் குறைந்தவாக்கியமுண்டானுல் அநுவக்கிரமுண்டு.

௰ச. இட்டத்துக்கேறின வாக்கியத்தைக் கீழேவைத்துக் குறைந்த வாக்கியத்தை வேறேவைத்து இரண்டுவாக்கியமுஞ் சுத்தம்பண்ணிப் பெரியவாக்கியத்தை இருப

Planets entering the signs.

10. Set down the ***Piramanam***, (i. e. the longitude at the end of the sign in which the planet is,) and subtract ***Druvam***. The result is called ***Ishda***. Take from the table ***Parivritti***, the next ***less*** and the next ***greater longitudes***, than ***Ishda***, and correct them as before directed.

Ascertain whether the motion of the planet be retro grade or direct, as directed in No. 8. If direct, subtract the ***Puruva*** from the ***Apara Vakya***; reduce all to minutes, add a cypher, and multiply by 6. Then divide this product by ***Ilakkantaram***, and the result will be ***Putti***.

11. From the ***Ishda***, subtract the ***Puruva Vakya*** corrected as before; reduce the remainder to minutes, and divide by ***Putti***, which gives the required ***days***.

The remainder is reduced to ***Nalikies***, by multiplying by 60, and dividing by ***Putti***.

12. Add to this quantity of ***days and Nalikies***, the number of days in the table corresponding to the ***Puruva Vakya***, and if a table has been completed since the commencement of the year, then add to this sum the highest number of days in the table. Subtract from the whole sum, the ***Varuda Sesha***, and as many ***Matha Vakya*** (days in a month) as are contained in the sum.

The number of ***Matha Vakya*** subtracted at once, indicates the month in which the transit will take place, and the ***remainder*** will show the time in the month at which the planet will pass to the ***new sign***.

Anuvakkram.

The transit of a ***planet*** in ***retrogradation***, into the ***preceding sign***.

13. From ***Ishda*** subtract 30°, and the remainder will be ***Anuvakkra Ishda***.

If, during the time between the commencement of Retrogradation and that of the planet's becoming stationary, there be found in the Table any longitude, less than the ***Anuvakkra Ishda***, then it will re-enter the preceding sign.

டிகட்டிச் சிறியவாக்கியங் கழிந்து நின்றபாகத்தைக் க லையாக்கி மீளவும் விகலையாக்கி இலக்காந்தரத்துக்கீந்து பெற்றபலம் புத்தியாம்.

௰௫. இந்தப் புத்தியை வைத்துக்கொண்டு பெரியவாக்கியத்திலே இட்டதைக்கழிந்து நின்றபாகையைக் கலையாக்கிக் கீழ்க்கூட்டி மீளவும் விகலையாக்கி முன்வைத்த புத்திக்கீந்து பெற்றபலந் தினமாம். நின்ற சேடம் அறுபதாற்பெருக்கி முற்கருவிக்கீந்து பெற்றபலம் நாழிகையாம். இதிலே பெருத்தவாக்கியத்து இலக்கத்தையுங்கூட்டி வருடாதிசேடமும் மாதவாக்கியமுங்கழிந்து இன்னமாதம் இத்தனையாந் தேதி இத்தனை நாழிகையிலே அநுவக்கிரமென்றறிக.

௰௬. செவ்வாய்க்கு ௭௨௫.ம் வாக்கியத்தில் அத்தமனம், ௫௫.ல் உதயம், ௬௨௧.ல் வக்கிரம், ௪௨௯.ல் நிமிர்ச்சி.

௰௭. புதனுக்கு ௧00.ல் அத்தமனம், ௧௭.ல் உதயம், ௪௯.ல் வக்கிரம், ௫௧.ல் வக்கிராத்தமனம், ௬௫.ல் வக்கிரோதயம், ௭0.ல் நிமிர்ச்சி.

௰௮. வியாழனுக்கு ௬௮௫.ல் பாடு, ௧௪.ல் உதயம், ௧௬௯.ல் வக்கிரம், ௨௫௯.ல் நிமிர்ச்சி.

௰௯. சுக்கிரனுக்கு ௫௪௯.ல் அத்தமனம், ௬௫.ல் உதயம், ௨௬௭.ல் வக்கிரம், ௨௮௭.ல் வக்கிராத்தமனம், ௨௯௭.ல் வக்கிரோதயம், ௬௧௪.ல் நிமிர்ச்சி.

௨௰. சனிக்கு ௬௬௧.ல் அத்தமனம், ௧௭.ல் உதயம், ௧௨0.ல் வக்கிரம், ௬௬0.ல் நிமிர்ச்சி.

௨௧. இவைகளெண்ணும்படி அந்தந்த இலக்கங்களை வைத்து வருடத்திற்பின் பரிவிருத்திசென்றாற் கேதபரிவிருத்தியிலே எல்லாவாக்கியத்திலும் ஈற்றில்வாக்கியத்து இலக்கத்தையுங் கூட்டி வருடாதிசேடங்கழிந்து மாத வாக்கியமுங் கழிய உண்டானாற் கழிந்து அந்தந்தக் கிரகம் அந்தந்த முறையாய் இன்னமாதம் இத்தனையாந் தேதி இத்தனைநாழிகையிலே இருக்குமென்றறிவது.

௨௨. ஆதிவாக்கியமுற்றால் எண்ணும்படி, மந்தோச்சத்தைப் பூருவவாக்கியமாக வைத்துப் படிகட்டிப் புடப்பெயர்ச்சி எல்லாம் எண்ணிக்கொள்க.

மந்தோச்சமாவது.

௨௩. செவ்வாய்க்கு "ஒதோம் மேலாகில்," புதனுக்கு

14. Take out the longitudes, the next less and the next greater than the *Anuvakkra Ishda*, and correct them according to the preceding rule.

From the greater longitude subtract the less, and reduce the remainder to seconds, and divide them by the *Ilakkantaram*, and the quotient will be *Putti*.

15. From the greater of the two longitudes, subtract *Anuvakkra Ishda*, and reduce the remainder to seconds and divide by *Putti*. The quotient will be *days*.

Multiply the remainder from the last division by 60, and divide by *Putti*, and the quotient will be *Nalikies*.

Add to these *days* and *Nalikies* the number of *days* in the Table corresponding to the greater longitude taken out. Subtract the *Varuda Sesha*, and as many *Matha Vakyas* as can be. The number of *Matha Vakyas* subtracted will indicate the month of *Anuvakkram*; and the remainder will show the time in the month of the planet's re-entrance into that sign.

Planetary Limits as to Immersion, &c.

16. In the case of Mars:

When the *tabular number* of days equals 725, Mars will immerse, or disappear in connection with the sun.

When the tabular days equal 55, there will be an emersion, or re-appearance.

When the tabular days equal 321, Mars will begin to retrograde.

When the tabular days number 429, Mars will be stationary, after retrogradation.

17. In the case of Mercury:

When the tabular days number 100, it will immerse.
When " 17, it will emerse.
When " 49, will begin to retrograde.
When " 51, immerse in retrogradation.
When " 65, emerse while retrograding.
When " 70, will be stationary after retro.

18. In the case of Jupiter:

When the days equal 385, it will immerse.
When " 14, will emerse.
When " 139, will begin to retrograde.
When " 259, will be stationary after retro.

''போஞேமோ சொல்லேன்,'' வியாழனுக்கு ''போஞே மோ சொல்லூர்,'' வெள்ளிக்கு ''போமோ போன்ஞெ ளி,'' சனிக்கு ''போவோங் கூடாரேன்றே.''

துருவப் பெயர்ச்சி.

உச. நாடியாதியான சுத்ததினத்திலே நாடியாதியாக வருடப் பிரமாணங் கூட்டி இதில் எடுக்கப்போதாத சோத்தியவாக்கியங்கள் எடுக்கப்போதுகிலும், எடுத்தவாக்கியம் பின்னேயும் ஒருக்கால் எடுபடினும் அந்தவாக்கியத்தை எடுத்துத் துருவத்தைக்கட்டிநின்ற சேடத்தை நாடியாதியான வருடப்பிரமாணத்திலே களைந்து இருபடிசெய்து ஒரு படியிலே மாதவாக்கியங் களைந்து இன்னமாதம் இத்தனையாந் தேதி இத்தனை நாழிகையிலே துருவப்பெயர்ச்சி என்றறிக. மற்றப்படி கேதசேடமென்றறிவது துருவப் பெயர்ச்சி எண்ணும்போழுது துருவப்பெயர்ச்சிக்கு முன்னே சொன்னபடியே பெயர்ச்சியிடுவது. துருவப் பெயர்ச்சிக்குப் பின் வருடாதிசேடங் களையாமற் கேதசேடத்தைக்கூட்டி மாதவாக்கியங் களைந்து பெயர்ச்சியிடுவது. இட்டமும் வேருக்கிக் கோள்க.

இராது புடம் எண்ண வகை.

உரு. தினமுதலான சுத்ததினத்திலே ''மூன்றூர்போமோ சொல்லூர்'' என்கிற வாக்கியங் களைந்து நின்றது ஊனதினமாம். இதை இருபடிவைத்து ஒருபடியை ''மாறை என்னூர்'' என்கிற புத்திக்கீந்து பேற்றபலம் விருதாப்பலமாம் ஈயாது நின்றசேடத்தின்கீழே ''கூத்தூரும்'' என்கிற வாக்கியத்தைவைத்து ஈந்துபெற்றபலம் இராசியாம். நின்றசேடத்தை முப்பதிற்பெருக்கி முற்கருவிக்கீந்து பெற்றபலம் பாகையாம். நின்றசேடத்தை அறுபதிற்பெருக்கி முற்கருவிக்கீந்து பெற்றபலங் கலையாம். அர்த்தாதிகமுண்டாகிற் கொடுத்துவாங்கிப்போட்டு நின்ற இராசி பாகை கலையை வைத்து முன்புநின்ற ஊனதினத்தின் கீழே ''கூற்றினையுண்டோன்'' என்கிறவாக்கியத்தை வைத்தீந்து பெற்றபல முன்னிருந்த இராசி பாகை கலையிலே களைந்து நின்றதைப் பன்னிரண்டிராசிவைத்துக் களைந்து நின்றது இராகுவுக்குச் சுத்தப்புடமாம். இதிலே ஆறிராசி கூட்டக் கேதுவுக்குச் சுத்தப்புடமாம்.

19. In the case of Venus:

When her tabular days are 549, she will immerse.
When " 35, will emerse.
When " 267, will begin to retrograde.
When " 287, will immerse in retrogradation.
When " 297, will emerse in retrogradation.
When " 314, will be stationary.

20. In the case of Saturn:

When his tabular days are 361, he will immerse.
When " 17, will emerse.
When " 120, will begin to retrograde.
When " 360, will be stationary.

21. In any given case, if one of the specified number of days occur, add to it the ***highest number of days*** in the table, provided any table shall have been completed since the commencement of the year. Then subtract the *Varuda Sesha*, and as many ***Matha Vakya***, as may be.

The number of ***Vakyas*** subtracted will indicate the month in which a given phenomenon will occur, and the remainder will show the ***time in the month***.

22. If the number of given days be less than the first tabular number of days, set down the aphelion longitude as ***Puruva Vakya***, and the first longitude from the table as ***Apara Vakya***, and proceed as before.

Aphelion Langitudes of the five Planets.

23. That of Mars is 3*s*. 28°.
" Mercury is 8*s*. 00.
" Jupiter is 6*s*. 00.
" Venus is 3*s*. 00.
" Saturn is 7*s*. 26°.

Change of Druvam.

24. From the days, &c. passed in *Cali Yuga*, subtract as many *Sodya Vakya* as may be, and add to the remainder the length of the year. If, from this sum, any one of the *Sodya Vakya* can be taken, there will be a change of ***Druvam***, (i. e. the longitude of aphelion.)

விசேடவுரை.

''மாறையென்னூர்'' என்பது இராகுவின் மண்டலதினமாம். இ ஃதை ''முல்லைவெண்பூ'' என்று முற்கூறியிருக்கிறது. ''கூத்தூரும்'' என்பது இராகு ஓரிராசியில் நடக்குங் காலமாகிய தினமாம். முற்குறி த்த வகையிற் கணிதஞ்செய்தால், ருகூகூகூ. தினத்தில் இராகு ஒருக லை விலகுமாதலால் ஊனதினத்தை ''கூற்றிவனயுண்டோன்'' என் னுங் கருவியாலரித்தபலங் கலைவது.

இராகுவுக்குச் சாரம் எண்ண வகை.

உகூ. வருடாதிக்குப் புடமேண்ணி இன்ன இராசியி லே நிற்கிறுனேன்றறிந்து மேனின்ற இராசியை எடுத்து ப்போட்டுக் கீழேநின்ற பாகையைக் கலையாக்கி மீளவு ம் விகலையாக்கி இத்தை ''வலையன்'' என்கிற வாக்கியத் துக்கீந்து பெற்றபலம் நாளாம். ஈயாது நின்ற சேடம் அ றுபதாற்பெருக்கி முற்கருவிக்கீந்து பெற்றபலம் நாழிகை யாம். இதிலே மாதவாக்கியங் கழிய உண்டானுற் கழி ந்து நின்றதனுல் இன்னமாதம் இத்தனையாந் தேதி இத் தனை நாழிகையிலே பெயருமேன்றறிவது.

விசேடவுரை.

ககூக. கலைக்கு இராகுசெல்ல, கூ0. நாட்செல்லுமாதலாற் ''கீழே நின்ற பாகை கலையை'' விகலையாக்கி ''வலையன்'' என்னுங் கரு வியாலரிப்பது.

To determine when the change of *Druvam* will take place:—

Having subtracted, from the sum before named, all the *Sodya Vakyas* which can be taken from it, subtract the remainder from the *length of the year*. From the last remainder, subtract as many *Matha Vakya* as may be. The number of *Matha Vakya* subtracted will indicate the *month*, and the remainder the *time in the month*, when the change will take place.

For the places of Raku and Kethu.

25. From *Sutta Tinam* subtract 1,600,066, and divide the remainder by 6792, and the next remainder by 566; the last quotient will be *signs*, and the last remainder, reduced, will be *degrees* and *minutes*.

Then divide the first remainder (from *Sutta Tinam*) by 5936, and the quotient will be *minutes*, which are to be subtracted from the signs, degrees, &c. above found. Subtract this remainder from 12*s*. and the result will be *Raku's true longitude*.

To this add 6*s*. and it will give *Kethu's true longitude*.

Note. The number 6792 is nearly the number of days in one revolution. Elsewhere this number has been stated to be 6795. The 566 is the number of days in which the nodes are passing through one sign.

The division by 5936 is founded on this proportion:—
As 5936 days : 1′ : : Kandam : correction required.

26. To determine when *Raku* will enter a new sign.

Rejecting the signs in the true longitude, reduce the degrees, &c. to *seconds*, and divide them by 191. The result will be *days*; and the remainder, reduced, will be *Nalikies*. From these *days* and *Nalikies* subtract as many *Matha Vakya* as may be.

The number of *Matha Vakya* taken will indicate the month, and the remainder, the time in the month, when the transit will occur.

Note. This is founded on the following proportion:—
As 191′ : the degrees &c. : : 60 days : number of days &c. required.

“யாழ்ப்பாண மன்னர் நிறுவிய தமிழ்ச்சங்கம்”

முச்சங்க காலத்திலிருந்து தமிழர் தோற்றுவித்த சங்கங்கள் பற்றிய ஒரு சுருக்கமான பார்வையை ஆசிரியர் இந்நூலில் செலுத்தியுள்ளார். இம்மூன்று சங்கங்களின் பின்னர் நாலாவதாக அமைந்த யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் பற்றிய ஆய்வே இந்நூலின் நோக்காயுள்ளது. யாழ்ப்பாண மன்னர்கள் 13ஆம் நூற்றாண்டிலே நிறுவிய தமிழ்ச் சங்கம் பற்றிக் கிடைக்கும் பெருந்தொகையான தகவல்களை ஆசிரியர் இந்நூலிலே தருகிறார். அளவு சிறியதாயிருப்பினும் காரம் பெரியதாயுள்ளது.

– பேராசிரியர் அ. சண்முகதாஸ்

பாலச்சந்திரன்,

உங்களுடைய நூலினை நான் விரும்பி வாசித்தேன். எங்களுடைய யாழ்ப்பாண பாரம்பரியத்தில் காணப்பெறும் இத்தகைய விடயங்களை அறிஞர்களினதும் மற்றோரினதும் கண்ணோட்டத்திற்கு எடுத்துவருவது நல்ல முயற்சியாகும். நீங்கள், மூல ஆதாரங்களைத் தேடியெடுத்து துல்லியமாகவும் தெளிவாகவும் உங்களது நூலில் அளித்துள்ளீர்கள்.

யாழ்ப்பாண மன்னர் நிறுவிய தமிழ்ச்சங்கம்பற்றி தங்களின் நூல் அமைந்திருந்தபோதும், தமிழ்நாட்டில் தமிழ்ச்சங்கம் தோன்றுவதற்கு முன்னர் ஈழத்திலே தமிழ்ச்சங்கம் தோன்றிய செய்தியையும் முன்வைத்துள்ளீர்கள். அத்துடன் ஈழத்திலே தோற்றம்பெற்ற 4ஆம் 5ஆம் தமிழ்ச்சங்கங்களைத் தமிழ்நாட்டு அறிஞர்கள் கவனிக்கத்தவறிவிடுவதையும் சுட்டிக்காட்டியிருந்தீர்கள். மதுரையில் தொடங்கிய தமிழ்ச்சங்கத்தை 4ஆம் சங்கமெனத் தமிழ்நாட்டு அறிஞர்கள் பிழையாகக் கருதிவருவதையும் ஆவணப்படுத்தியிருந்தீர்கள். இவையாவும் இந்நூலில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பது கனதியைத் தருகின்றது.

எனது வாழ்த்துக்களை அன்புடன் தெரிவிக்கின்றேன்.

– பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை (16–ஒக்டோபர், 2015)

(இறப்பதற்கு சில தினங்களுக்கு முன்னர் எழுதிய ஆங்கிலக் கடிதத்தின் மொழிபெயர்ப்பு)



“சைமன் காசிச்செட்டியின் அகராதி முயற்சிகள்”

எந்த நிறுவனத்தினதும் ஆதரவின்றித் தன் அறிவாற்றலை வளர்த்துக்கொண்டு பெறுமானமிகு ஆய்வுகளில் ஈடுபட்ட காசிச்செட்டி, நிறுவனங்களால் மேற்கொள்ளப்படவேண்டிய பணிகளைத் தன்சொந்த முயற்சியால் நிறைவேற்றியுள்ளார். ஆனால், அவரது பிரமிக்கவைக்கும் பங்களிப்புகள் உரிய அங்கீகாரம் பெறாது மறக்கப்பட்டும் ஒரோவழி மறைக்கப்பட்டும் கிடக்கின்றன.

ஞானம் பாலச்சந்திரனின் இவ்வெளியீடு காசிச்செட்டியின் அகராதி முயற்சிகளையும் அத்துறையில் அவர் முன்னோடித் தமிழராய்த் திகழ்ந்தவாற்றையும் குவிமையப்படுத்துவதாய் இருந்தாலும், அவரது பல்துறைப் பங்களிப்புக்களின்பாலும் வாசகர் கவனத்தைத் திசைமுகப்படுத்துவதாய் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

– பேராசிரியர் சி. தில்லைநாதன்

ஞானம் பாலச்சந்திரன் ஈழத்துத் தமிழிலக்கிய உலகிற்கு தருகின்ற நூல்களைக் கண்டு பிரமித்து நிற்கின்றேன். தமிழ் ஆய்வு, தமிழியல் ஆய்வாக பரிணமித்துள்ள இக்காலகட்டத்திலே, ஞா. பாலச்சந்திரன் தருகின்ற நூல்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இவர் ஈழத்து இலக்கிய வரலாற்றுக்குப் 'புதிய ஒளி' பாய்ச்சும் பணியில் ஈடுபட்டுள்ளார். கி.பி. 1506 ஆம் ஆண்டு வெளியாகிய 'கிரகசார எண்ணல்' என்னும் வானசாஸ்திர நூல் இப்போதுதான் முதன்முறையாக எமது பார்வைக்குக் கிடைக்கின்றது.

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா

ISBN 978-955-8354-60-5